பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 12 சனிக்கிழமை (24-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:151

# நாடாளுமன்றத்தில் கூச்சலிட்டு புலிகளை அடக்கிவிட முடியாது!

## பிக்கு எம்.பிக்கள் அரசுக்குச் சாட்டை

கொழும்பு,ஏப்ரல்24

**தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்தில் பேசவிடாமல் கூச்சலிட்டுக் குழப்புவதன் மூலம் தாங்கள் புலிகளை வென்றுவிடலாம் என்று அரசுத் தரப்பினர் கருதுகின்றனர் போலும். இது சிறுபிள்ளைத்தனமான செயலாகும்.**

**ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்கு எம்.பிக்கள் இப்படி விமர்சித்திருக்கின்றார்கள்.**

நேற்றுக் கொழும்பில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

ஹெல உறுமயவின் எம்பிக்களான வண. எல்லாவெல மெத்தானந்த தேரர், வண. உடுவே தம்மாலோக தேரர், வண. சடவத்த நந்ததேரர், அத்துரலிய ரட்ண தேரர், வண. ஒமல்பே சோபித தேரர் ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் தங்கள் கட்சி எம்.பிக்கள் செயற்பட்டவிதம் குறித்து அவர்கள் இந்தச் செய்தியாளர் சந்திப்பில் விளக்கினர். அப்போது அவர்கள் கூறியதாவது:-

எமது கட்சி எம்.பிக்களான இரு பௌத்த குருமார் எங்களுடன் தொடர்பில்லாமல் போகும் வகையில் கடத்தப்பட்டுள்ளனர். இந்தக் கடத்தலுக்கான பொறுப்பை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே ஏற்கவேண்டும். கடத்தலுக்கான திட்டத்தை ஜே.வி.பியினரே தீட்டினார்கள்.

காணாமற்போன நாடாளுமன்ற உறுப்பினரான வண. கத்தலுவே ரத்ன சீலிதேரர் ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவரின் வாகனத்திலேயே நேற்று முன்தினம் நாடாளுமன்றம் சென்றார்.

மற்றையவரான வண.அபரகே புண்ணியானந்ததேரர் ஜே.வி.பியின் உறுப்பினர் ஒருவரின் வாகனத்தில் நாடாளுமன்றம் சென்றார்.

இந்த இரு எம்.பிக்களின் விவகாரம் தொடர்பாக நாம் முன்னரே ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் ஐந்து தடவைகள் பேசியிருந்தோம். ஆனால், அவர்கள் தமக்கு எதுவுமே

(14ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தமிழ் எம்.பியின் அலுவலகம் தீக்கிரை!

அம்பாறை மாவட்டத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே. பத்மநாதனின் காரைதீவு அலுவலகம் கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இத்தீவிபத்தினால் மேற்படி அலு

(14ஆம் பக்கம் பார்க்க)

## சு.கூட்டமைப்பு எம்.பி.ராஜினாமா!

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பியான ஜனதாஸ பீரிஸ் தமது எம்.பி. பதவியை நேற்றுமாலை இராஜினாமாச் செய்தார்.

ஜனாதிபதிக்கு மிக நெருங்கியவரான இவர், முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அல்லது கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரட்ண ஆகிய இருவில் ஒருவருக்கு எம்பி. பதவியை வழங்குவதற்கு இடமளிப்பதற்காகவே தமது பதவியை இராஜினாமாச் செய்தார் எனத் தெரிகின்றது.

லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத் தலைவர் பதவியை ஏற்பதற்காகவே இவர் தமது பதவியை இராஜினாமாச் செய்தார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் பத்திரிகையாளரும் ஊடக அமைச்சின் முன்னாள் செயலாளருமான ஜனதாஸ பீரிஸ் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையின் கீழ அரச ஊடகத் துறையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். (க-7)

## வெடிபொருள்களை வைத்திருந்த குடும்பஸ்தர் மட்டு. நகரில் கைது!

மட்டக்களப்பு,ஏப்.24

வெடிபொருள்களை எடுத்துச்சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மட்டக்களப்பில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மாவடி வேம்புப் பிரதேசத்தைச் சேர்ந்த பரசுராமன் நவரத்தினம் (வயது-29) என்பவரே நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டவர் ஆவார். வாழைச்சேனை வீதியில் வழமைபோல் படையினருடன் கூட்டு ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலீஸார், மேற்படி நபர் வைத்திருந்த சாக்குப்பையை சோதனையிட்டனர் என்றும் -

அப்போது அதற்குள் இருந்து கைக்குண்டு ஒன்று, ரி-56 ரகத் துப்பாக்கிக்கான ரவைகள் - 150, அதற்கான மகஸின்கள் - 6 என்பன கைப்பற்றப்பட்டன என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தொழிலின் நிமித்தம் சென்ற சமயம் இவற்றை தொப்பிக்கல காட்டில் உள்ள முகாமில் கண்டெடுத்தார் எனறு கைதுசெய்யப்பட்ட நபர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, நீதிவான் நீதிமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை ஆஜர் செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர் வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எம்.எச்.எம். அஸ்மி உத்தரவிட்டுள்ளார்.

(ஒ-9-7)

## சம்பந்தன், ஜோசப் நீதிமன்றில் மனு!

கொழும்பு,ஏப்.24

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்சி ரீதியான உள் கூட்டங்களை அதன் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் முன் இணக்கமின்றி நடத்தக்கூடாது என்று தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள தடை உத்தரவை ரத்துச்செய்யக்கோரி அதே நீதிமன்றில் நேற்று மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

முன்னைய தடை உத்தரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்தது. இவர்களின் சார்பிலேயே இந்தத் தடை உத்தரவை ரத்துச் செய்யக் கோரும் மனு நேற்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

வீ.ஆனந்தசங்கரி இந்த மனுவில் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

தலைவர் என்ற முறையில் தமது இணக்கமின்றி கட்சியின் நிர்வாகக் கூட்டங்களை நடத்தக்கூடாது என உத்தரவிடக்கோரி வீ.ஆனந்தசங்கரி தாக்கல் செய்திருந்த வழக்கில், அந்த வழக்கின் விசாரணை முடிவடையும் வரை நடைமுறையில் இருக்கத்தக்கதாக மேற்படி இடைக்கால தடை உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருந்தது என்பது தெரிந்ததே.

(ஒ-க-9-7)

### அமைதி முயற்சிக்கான அனுசரணைப் பணி

## ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றது நோர்வே அரசு!

கொழும்பு,ஏப்.24

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கையில் அனுசரணைப் பணியாற்ற வருமாறு இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை நோர்வே அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

அந்நாட்டின் பிரதமர் கெஜில் மகின் பொண்டிவிக் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

தற்போது இலங்கைத் தரப்பில் சமாதான முயற்சிகளைப் பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இரவு தொலைபேசியில் தம்முடன் தொடர்புகொண்டு ஒஸ்லோவின் பணியை மீள ஆரம்பிக்குமாறு தம்மைக் கோரினார் என்று நோர்வேப் பிரதமர் தெரிவித்தார்.

கொழும்பு அரசில் ஏற்பட்ட அதிகார இழுபறியை அடுத்து கடந்த நவம்பரில் தனது அனுசரணைப் பணியை நோர்வே இடைநிறுத்தியிருந்தது தெரிந்ததே.

"உங்கள் கோரிக்கைக்கு இணங்கச் செயற்படுவதற்கு நாங்கள் தயார். ஆனால், அத்தகைய பங்களிப்பை வழங்கும்படி புலிகளும் எங்களை அழைக்கவேண்டும். அப்படி அழைத்தால் அப்பணியை ஏற்றுச் செயற்படுவோம் - என்று இலங்கை ஜனாதிபதிக்கு நான் பதிலளித்தேன்" - என நேற்றுத் தெரிவித்தார் நோர்வேப் பிரதமர்.

நோர்வேத் தரப்பு புலிகளுக்குச் சார்பாக செயற்படுகிறது என முன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை விமர்சித்தவரே அதை உதவிக்கு அழைக்கிறார்!

இலங்கை சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணைப் பணியை முன்னர் மிக மோசமாகவும் கடுமையாகவும் விமர்சித்து வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது அந்த நாட்டை சமாதான முயற்சிககு அழைத்திருப்பது பல கேள்விகளைத் தோற்றுவித்துள்ளது.

ஜனாதிபதியின் முன்னைய விமர்சனங்கள நோர்வேயின் எதிர்காலப் பங்களிப்பை பாதிக்குமா என்று நோர்வே நாட்டு வெளியுறவு அமைச்சின் சார்பில் பேசவல்ல அதிகாரி கெஸ்ரிங் கிளப் சிங்கிடம் ஒஸ்லோ நகரில் வைத்துக் கேட்கப்பட்டது.

அதற்கு அவர், "அப்படியல்ல புதிய ஜனாதிபதி எங்களைத் தொடர்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழகத்தில் தங்கியிருந்த ஈழத் தமிழ் அகதிகள் 15 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

இந்தியாவில் தர்மபுரி மாவட்டத்தில் வாழ்ந்து வந்த இவர்கள், தலைமன்னார் ஊடாகத் தாயகம் திரும்பியுள்ளனர். மன்னார், சாவற்கட்டு, பேசாலை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி போன்ற இடங்களைச் சேர்ந்த 12 ஆண்களும் 3 பெண்களுமே இவ்வாறு தாயகம் திரும்பியுள்ளனர். (ஒ-9-7)

### சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் விடயம்:

## தமிழ்க் கூட்டமைப்பின் போக்கே ஜனாதிபதியை செயற்பட வைத்தது?

கொழும்பு,ஏப்.24

சமாதான நடவடிக்கைகள் குறித்து இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது அரசும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காததன் காரணத்தினாலேயே சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரை தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிகள் ஆதரித்தனர் என்று தமிழ்க் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் அறிவித்தகையோடு -

சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு நோர்வேத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யானை-புலி-பிக்குகள்-முஸ்லிம்கள் கூட்டின் தெரிவு புதிய சபாநாயகர்!

### சீற்றத்துடன் கூறுகின்றார் விமல் வீரவன்ஸ

யானை - புலி - பிக்குகள் - முஸ்லிம்கள் அடங்கிய, தூய்மையற்ற, நம்பிக்கை வைக்கமுடியாத கூட்டின் தெரிவே இந்தப் புதிய சபாநாயகர். இப்படிச் சீற்றத்துடன் கூறுகின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ஸ.

தமிழீழத்தைக் கோரும் தமிழ்க் கூட்டமைப்பும், 'தர்ம இராஜ்ஜியம்' அமைக்கப்போவதாகக் கூறும் ஜாதிக ஹெல உறுமயவும், லொக்குபண்டாரவை சபாநாயகராகத் தெரிவுசெய்வதற்கான அணி சேர்ந்தமை தலைவிதியேயன்றி வேறில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் 14 மாவட்டங்களில் தோற்கடிக்கப்பட்ட ஐ.தே.கட்சிக்கு நாடாளுமன்றத்தில் வெற்றி வாங்கிக கொடுப்பதற்காக ஹெல உறுமய நாடாளுமன்றத்தில் முதல் நாள் செயற்பட்ட விதத்திலிருந்தே அதன் எதிர்காலச் செயற்பாட்டுப் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினர் ஜனநாயக விரோதிகள் அது நாடாளுமன்றத்தில் நிரூபணம்!

### ஐக்கிய தேசியக்கட்சி கூறுகிறது

கொழும்பு,ஏப்.24

ஜே.வி.பியினர் ஜனநாயக விரோதிகள் என்பது 13ஆவது நாடாளுமன்றம் கூடிய போது உறுதிசெய்யப்பட்டுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தபிக்குகள் மீது புத்தகங்களைத் தூக்கியெறிந்து தகாத வார்த்தைகளால் அவர்களைத் தூசித்தமை பௌத்த மதத்தை அவமதித்ததற்குச் சமானமாகும். ஐக்கிய தேசியக்கட்சி விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு தமது கோரிக்கைக்கு உடன்படாத பௌத்த பிக்குகளைக் கொன்றொழித்த ஜே.வி.பியினர் இன்று நாடாளுமன்றில் தமக்கு அவர்கள் ஆதரவளிக்கவில்லை என்ற காரணத்துக்காக அவர்களுக்கு எதிராக மிகவும் கீழ்தரமான (14ஆம் பக்கம் பார்க்க)

புதிய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### சபாநாயகர் தேர்வில் தோற்ற சீற்றத்தில்

# இரா.சம்பந்தனைப் பேசவிடாமல் ஆளும் தரப்பினர் அட்டகாசம்!

கொழும்பு,ஏப்.24

நேற்றுமுன்தினம் 13ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு ஆரம்பமாகியது. நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவு பல இழுபறிகளுக்கு மத்தியில் நடந்து முடிவடைந்தது.

புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட வி.ஜெ.மு.லொக்குபண்டாரவின் தலைமையில் அமர்வு ஆரம்பமானபோது முதலில் புதிய சபாநாயகரை வரவேற்று கட்சித் தலைவர்கள் உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

இந்தவேளையில் -

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்ற அழைக்கப்பட்டார்.

அவர் உரையாற்றத் தொடங்கியவுடனேயே ஆளும் கட்சித் தரப்பினர் கூச்சலிலும் குழப்பத்திலும் ஈடுபடத் தொடங்கிவிட்டனர்.

தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை அவர் ஆணித்தரமாகக் கூறினார். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தமிழ்க் கூட்டமைப்பு மூலம் ஆணை வழங்கியுள்ளனர். தமிழருக்கு சுயாட்சியுடன் கூடிய ஒரு தீர்வே இறுதித் தீர்வாக அமையும் என்பதை அவர் வலியுறுத்தியபோது ஆளும் தரப்பிலிருந்து பலர் 'கொட்டியா', 'கொட்டியா' என உரக்கச் சத்தமிட்டனர்.

அனுரா பண்டாரநாயக்கவும் 'கொட்டியா' என்று சத்தமிட்டார். இரா.சம்பந்தனைத் தொடர்ந்து உரையாற்ற விடாமல் அவர்கள் கூச்சலிட்டனர்.

இத[illegible], தமிழ்க் கூட்டமைப்பு எம்.[illegible]கள் சிலர் ஆவேசமுற்றனர். சுமார் 20 நிமிடங்கள் சபை அமளிதுமளியானது. இந்தக் கூச்சலுக்கு மத்தியிலும் உரையைத் தொடர்ந்தார் சம்பந்தன்.

சபாநாயகருக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டதுடன், சபாநாயகர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற டி.யூ.குணசேகரவுககுப் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

சபைக்கு முதல்வரான லொக்கு பண்டார பேதங்களின்றி செயற்படுவார் என தான் நம்புகிறார் என்றும் அவர் கூறினார். ஆளும் கட்சிகளின் கூச்சல் காரணமாக இடைநடுவில் தனது உரையை அவர் நிறுத்திக்கொண்டார்.

அவரைத் தொடர்ந்து ஜாதிக ஹெல உறுமயவில் பிரிந்து நிற்கும் இரண்டு பௌத்த பிக்குகளில் ஒருவர், அக்கட்சியின் சார்பாக உரை நிகழ்தத முற்பட்டபோது அதை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்தனர். அக்கட்சியின் தலைவரே உரை நிகழ்த்தவேண்டும் என்றனர்.

உடனடியாக அனுரா பண்டாரநாயக்க எழும்பி "சம்பந்தன் என்ற புலிக்கு உரையாற்ற சந்தர்ப்பம் கொடுக்கும் போது, சிங்கள பௌத்த பிக்குவிற்கு சந்தர்ப்பம் வழங்கமுடியாதா?" - என்றார்.

அவரின் கோரிக்கையை ஆதரித்து ஆளுங்கட்சி எம்.பிக்கள் மேசைகளில் தட்டிக் கரகோஷம் செய்தனர். உடனடியாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் மேதானந்த தேரர் எழும்பி நின்று தனது கட்சியின் தலைவர் தான் என்பதால் தானே உரையாற்றப் போகிறார் என அறிவித்தார். சபாநாயகரும் அதற்கு இணங்கினார்.

அவரையும் உரையாற்றவிடாமல் ஆளும் தரப்பினர் கூச்சலிட்டுத் தடுத்தனர். உடனே அவர் சார்பாக மற்றொரு பிக்கு உரையாற்ற முற்பட்டார். "நாம் உங்களுக்கு எதிர்காலத்தில் ஆதரவு வழங்குவதாகக் கூறியும் நீங்கள் இப்படி எம்மை இழிவுபடுத்தும் செயலில் ஈடுபட்டால் எமது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டிவரும்" - என அவர் கூறியபோது ஆளும் தரப்பிலிருந்து தகாத வார்த்தைகளாலும் சிலர் திட்டித் தீர்த்தனர்.

டி.யூ.குணசேகர சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து உரையாற்றும்போது, கடந்த காலத்தில் நாடாளுமன்றில் கடைப்பிடிக்கப்பட்ட நெறிமுறைகள் பற்றி விளக்கமாக எடுத்துக்கூறினார்.

தற்போது நாடாளுமன்றில் இடம்பெறும் தகாத செயற்பாடுகள் நாடாளுமன்றுக்குரிய பண்பை இல்லாமல் ஆக்கிவிடுமோ என்ற ஆதங்கம தனக்கிருப்பதாக அவர் கூறினார். அப்போது ஆளும் தரப்பு எம்.பிக்கள் அவரது உரையை மிகவும் கவனமாகச் செவிமடுத்தனர். கடந்த காலத்தை ஒப்பிடும் போது மிகவும் மோசமான நிலையை நோக்கியே நாடாளுமன்றம் செல்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார். இந்த நாடாளுமன்றில் என்றுமே இப்படியொரு இழுபறி நிலை ஏற்பட்டதே இல்லை. சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்குக் காலை முதல் மாலை வரை போர்க்களமாக நாடாளுமன்றம் தென்பட்டது. தகாத வார்த்தைகளும், பௌத்த பிக்குகளைக் கேலிசெய்வதும் மனிதப் பண்புகளுக்குரியவை அல்ல.

நாடாளுமன்றுக்கு முதன்முறையாக சபாநாயகராக லொக்குபண்டார நுழைகிறார். இது அவருக்கு முதல் அனுபவம். 27 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் இன்று சபைத் தலைவரானதையிட்டு நான் பெருமையடைகிறேன். அவர் கட்சி சார்பற்ற நிலையில் செயற்படுவார் என நான் நம்புகிறேன் - என ரணில் தெரிவித்தார்.

சபாநாயகர் தனது பதில் உரையின்போது, இலங்கை என்பது சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் போன்றோருக்குச் சொந்தமான நாடு. இந்த நாட்டின் மைந்தர்கள் என்ற உணர்வு அனைவருக்கும் இருக்கவேண்டும் - என வலியுறுத்தினார்.

"இப்படியொரு உயர் பதவிக்கு வந்ததையிட்டு முதலில் எனது பெற்றோருககும் நான் பிறந்த இடத்தில் வசிக்கும் அப்புத்தளை வாழ் மக்கள், பதுளையில் எனக்கு வாக்களித்த மக்கள் என" பலருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தப் பதவி வகித்தாலும் பிறந்த இடத்தையும் மக்களையும் மறந்துவிடக்கூடாது.

"நான் இதுவரைக்கும் தப்புச் செய்துவிட்டு மன்னிப்புக் கோரியது கிடையாது. யாரையும் மனம் புண்படும்படியும் நடந்துகொண்டதும் கிடையாது. தொடர்ந்தும் அப்படியே இருப்பேன் - எனத் தனதுரையில் தெரிவித்தார் புதிய சபாநாயகர்.

சபாநாயகரின் உரையை ஆளும் கட்சியினர் மிகவும் அமைதியாக இருந்து அவதானித்துக்கொண்டிருந்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட சபாநாயகரை மிகவும் உயர்த்தியே தனது பாராட்டுரையை நிகழ்ததினார். சபாநாயகர் பக்கச்சார்பின்றி செயற்படுவார் என்பதைத் தான் முழுமையாக நம்புகிறார் எனத் தெரிவித்த அவர் ஜனநாயகம் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதில் தான் மிகவும் உறுதியாகவிருக்கின்றார் எனவும் தொகுதிவாரியாகத் தமக்குக் கிடைத்த வெற்றியை நாடாளுமன்றம் சிக்கல் படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (க)



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம், 'உயிர்ப்பின்னூட்டல்' கருவிகள் இரண்டை யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள மருத்துவபீட மாணவர்களின் உளவளத் துணைப் பிரிவுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் நிலையை அறிந்து கொள்வதற்குரிய இக்கருவிகளை புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி மேரி சிகான் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவபாலனிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம் அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## லொக்குபண்டார சபாநாயகராகத் தெரிவானதும்
# சபையில் ஆளும் தரப்பினரின் ஆக்ரோஷம் பீறி வெடித்தது!

கொழும்பு,ஏப்.24

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சபாநாயகரைத் தெரிவுசெய்வதற்காக இடம்பெற்ற மூன்றாவது வாக்கெடுப்பில் ஆளும் கட்சி வேட்பாளரான டியூ குணசேகரவை ஒரு மேலதிக வாக்கால் தோற்கடித்து எதிர்க்கட்சி வேட்பாளர் லொக்குபண்டார புதிய சபாநாயகரானார்.

110 வாக்குகளுக்கு 109 வாக்குகள் என்ற அடிப்படையில் லொக்குபண்டார வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டதும் ஆளும் கட்சித்தரப்பில் கோபம் கொப்பளித்தது.

அது பின்னர் புதிய சபாநாயகரை வரவேற்று கட்சித் தலைவர்கள் உரையாற்றியபோது வெடித்து வெளிப்பட்டது.

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் சம்பந்தன் உரையாற்றிய சமயம் அவரைப் பேசவிடாமல் கத்திக் கூச்சலிட்டுக் குழப்பினர் அரசுத்தரப்பினர்.

அதேபோன்று ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு எம்.பி. உரையாற்றிய சமயமும் அட்டகாசம் எல்லை மீறியது. ஆவணங்கள், பத்திரங்கள், கோவைகள், புத்தகங்கள் என்பன பிக்கு எம்.பியை நோக்கித் தூக்கி வீசப்பட்டன.

நாடாளுமன்றத்துக்குப் பொருந்தாத வார்த்தைகளும், தூஷணங்களும் தாராளமாக எதிரொலித்தன.

எதிரணித் தரப்பிலிருந்த பல மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாயடைத்துப் போய் இருந்தனர்.

ஆளும் கட்சித் தரப்பில் மூத்த உறுப்பினர்கள் சிலர் தமது பக்கத்தில் எல்லை மீறி நடந்து கொண்டிருக்கும் எம்.பிக்களைச் சமாதானப் படுத்தி அடக்க முற்பட்டனாயினும் அது பலிக்கவில்லை. (க)

## வர்த்தக வங்கியின் பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.24

அண்மையில் வெளியான 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு ஒன்றை வர்த்தக வங்கியின் யாழ் கிளை ஏற்பாடு செய்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வங்கியின் யாழ்.கிளையில் இந்நிகழ்வு இடம்பெறும்.(எ-12)

## 'இலங்கை விகடன்' அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஏப்.24

'இலங்கை விகடன்' வார சஞ்சிகையின் அறிமுக விழா நாளை யாழ். பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த அறிமுக விழாவில் புதிய தோர் திருப்புமுனையான செயல் வடிவமாக சஞ்சிகையை வெளியிடும் நிறுவனத்தை மக்கள் மயமாக்கும் திட்டமும் முன்வைக்கப்படும். அதன் பொருட்டு வாசகர்கள் - மக்கள் - மத்தியில் பங்குகள் அறிமுகம் செய்யப்படும்.

நாளை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழாவுக்கு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தலைமை வகிப்பார்.

மக்கள் வங்கியின் காங்கேசன் துறைக் கிளையின் முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி தொடக்க உரையையும், தமிழ்த்துறைத் தலைவரும் ஊடக மூலவள நிலையத்தின் இணைப்பாளருமான பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொகுப்புரையையும் நிகழ்த்துவர்.

சமயத் தலைவர்களின் ஆசியுரைகளும் மூத்த சமூகத் தலைவர்களின் வாழ்த்துரைகளும் அறிமுக விழாவில் இடம்பெறும். (அ)

# சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,ஏப்.24

சாவகச்சேரி கல்வயல் ஹரிஹர புத்திரர் ஆலய மணவாளக் கோல விழாவும் அலங்கார உற்சவமும் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் மே மூன்றாம் திகதி சங்காபிஷேக தீர்த்தமும் மறுநாள் சித்திரா பூரணை விசேட அபிஷேகமும் மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஒ-117)

★ ★ ★

சுழிபுரம்,ஏப்.24

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலய மண்டலாபிஷேகத திருவிழா இன்று காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது. (எ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம,ஏப்.24

கரணவாய் வடக்கு, எள்ளன்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்களுக்கு நடைபெறும் இந்த உற்சவ நிகழ்வில் எதிர்வரும் 3ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 4ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.(ஐ-8-15)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.24

கோண்டாவில், நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணி தொடக்கம் 11 மணி வரையான சுபநேரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9 மணிக்குத் ரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். 6ஆம் திகதி பூங்காவனம் நடைபெறும். அன்றையதினம் மாலை 5மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று விநாயகர் வீதியுலா வருவார். மஹோற்சவ நாள்களில் தினமும் இரவு 8.30 மணிக்கு சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (எ-10-152)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஏப்.24

அரா[illegible], உலோலை சிட்டி விநாயகர் [illegible] வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்தமாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ-8-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.24

திருநெல்வேலி, அரசடி சிவகாம சுந்தரி அம்பாள் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாளான 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் இடம்பெறும். (ஐ-8-135)

# வடமேல் மாகாணசபை தேர்தல் இன்று நடக்கிறது

புத்தளம்,ஏப்.24

வடமேல் மாகாண சபைக்கான நான்காவது தேர்தல் இன்று இடம்பெறுகிறது.

இந்தத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதுள விஜேசிங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராக குருநாகல் மாவட்டத்திலும், முன்னாள எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அசோக வடிகமங்காவ ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமை வேட்பாளராகப் புத்தளம் மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர்.

மாகாணத்திலுள்ள குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இத்தேர்தலின் வாக்களிப்பை இன்று நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் குருநாகல் மாவட்டதிலிருந்து 10 லட்சத்து 89 ஆயிரதது 482 வாக்காளர்களும் புத்தளம் மாவட்டத்தில் இருந்து 4 லட்சத்து 50 ஆயிரத்து 57 வாக்காளர்களுமாக மொத்தம் 15 லட்சத்து 39 ஆயிரத்து 539 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

52 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்படும் இத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் 518 வேட்பாளர்களும், புத்தளம் மாவட்டத்தில் 285 வேட்பாளருமாக மொத்தம் 803 வேட்பாளர்கள் தேர்தலில் குதித்துள்ளனர். புத்தளம் மாவட்டத்திலுள்ள 5 தேர்தல் தொகுதிகளில் 387 வாக்களிப்பு நிலையங்களும் குருநாகல் மாவட்டத்தில் 14 தேர்தல் தொகுதிகளில் 819 வாக்களிப்பு நிலையங்களுமாக மொத்தம் 1206 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் பாதுகாப்புக் கடமையில் 5 ஆயிரம் பொலீஸாரும் தேர்தல் கண்காணிப்புப் பணியில் சுமார் 3 ஆயிரம் உள்நாட்டு கண்காணிப்பாளர்களும் ஈடுபடுவர்.

'பவ்ரல்' அமைப்பு 2ஆயிரத்து 500 பேரையும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் 420 பேரையும் கண்காணிப்பில் ஈடுபடுத்தவுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதலாவது மாகாண சபைத் தேர்தல் இதுவாகும்.

இத்தேர்தலில்தான் முதன் முறையாக வாக்காளர்களுக்கு மோதிர விரலில் சாயம் பூசப்படவுள்ளது.

முன்னைய தேர்தல்களின்போது வாக்களித்தமையை உறுதிப்படுத்தும மை சின்னவிரலிலேயே பூசப்படுவது வழமை. (க)

யாழ்ப்பாணம்

# வடகொரியாவில் ரயில்கள் மோதி 3,000 பேர் பலி?

சியோல், ஏப்.24

வடகொரியாவில், எரிபொருள்களை ஏற்றிச்சென்ற இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதி வெடித்ததில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ரயில் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுற்றியிருந்த கிராமங்கள் பலநாசமாகின என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தை அடுத்து வடகொரியாவில் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக உள்ளூர் வாசிகள் சிலர் தெரிவித்தனர்.

கம்யூனிச நாடான வடகொரியாவிலிருந்து செய்திகளைப் பெற முடியாது என்பதால் இழப்புகளின் உண்மையான விவரத்தை அறிய முடியாதநிலை தொடர்கின்றது. சீன எல்லையையொட்டியுள்ள இடத்தில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஒரு நாள் கழிந்த நிலையிலும் விபத்துப் பற்றிய பூரண செய்திகள் வெளியாகவில்லை. எனினும், மிகப்பெரும் விபத்து இடம்பெற்றது என்பதை வாஷிங்ரனும் சியோலும் உறுதிப்படுத்தியுள்ளன.

பயங்கரமான இந்த விபத்தை அடுத்து பல கிராமங்களில் சடலங்கள் சிதறிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மீட்புப் பணிகளை மேற்கொள்ளமுடியாத அளவுக்கு நிலைமை மிக மோசமாகவுள்ளது. பெரும் தீ கொளுந்துவிட்டு எரிவதனால் தீயணைப்பு வாகனங்களோ ஹெலிக்கொப்டர்களோ அந்த இடத்தை நெருங்க முடியாதுள்ளன.

தனது நெருங்கிய நட்பு நாடான சீனாவிடமிருந்து வடகொரியா உதவிகளைக் கேட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

விபத்தின் கோரம் அதிகமாக உள்ளதனால் வெளிநாடுகளுடனான தொலைத் தொடர்புகளையும் வடகொரியா துண்டித்துவிட்டது.

றியொங்சூன் என்ற ரயில் நிலையத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது. சீனாவிலிருந்து நாடு திரும்பிய வடகொரிய அதிபர் கிம் ஜங் இல் இதே ரயில் நிலையத்தைத் தாண்டி சென்ற 9 மணி நேரத்தின் பின்னர் விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிரெதிரே வந்த இரு ரயில்கள் மோதிக் கொண்டுள்ளன. அவை பெற்றோல் மற்றும் திரவ சமையல் வாயு என்பனவற்றை ஏற்றி வந்துள்ளன.

நேற்றுமுன்தினம் உள்ளூர் நேரப்படி பிற்பகல் ஒரு மணியளவில் ரயில்கள் மோதிச் சிதறின. ரயில் நிலையமும் துகள்களானது. வெடித்துச் சிதறிய பொருள்கள் பல மைல்கள் தூரத்தில் உள்ள நகரங்களிலும் சென்று வீழ்ந்துள்ளன.

தென்கொரிய உதவி அதிபர் கோகூன், மனிதாபிமான உதவிகளை உடனடியாகத் தயார் செய்யுமாறு தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். வடகொரியா கேட்டால் இந்த உதவிகள் அனுப்பப்படும். அமெரிக்காவும் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளது. ஆனால், வடகொரியா வெளிப்படையாக எதனையும் அறிவிக்காத நிலையில் எந்த உதவிகளையும் அங்கு அனுப்ப முடியவில்லை.

சீன எல்லையிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் விபத்து நடந்த றியொங்சூன் இருக்கிறது.

இங்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் சனத்தொகை காணப்படுவதாக செய்தி நிறுவனங்கள் கூறுகின்றன. உற்பத்தி மற்றும் போக்குவரத்து மையமாக இது விளங்குகின்றது.

விபத்துக்கான சரியான காரணங்கள் தெரியவராத நிலையில் பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஒன்று, வடகொரியத் தலைவர் கிம்ஜொங் மீது தாக்குதல் நடத்த முற்பட்டிருக்கலாம். ஆனால், அதிகாரிகள் இதனை அடியோடு மறுக்கின்றனர்.

இரண்டாவது, சீனாவிலிருந்து அதிபர் கிம் நாடு திரும்பிய விசேட ரயிலுக்கு வழிவிட வசதியாக இந்த இரு ரயில்களினதும் பயண நேரங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். பின்னர் ஏற்பட்ட நேரக் குளறுபடிகளால் விபத்து இடம்பெற்றிருக்கலாம்.

மூன்றாவது அதிபர் கிம்மின் விஜயத்தையொட்டி சீனாபெற்றோலை அன்பளிப்புச் செய்திருக்கலாம். கிம்மின் ரயிலைத் தொடர்ந்து வந்த பெற்றோல் தாங்கிய ரயில் குறித்த தகவல்கள் உள்ளூர் அதிகாரிகளுக்குச சரியாக வழங்கப்படாமல் விடப்பட்டிருக்கலாம்.

இதனால், விபத்து ஏற்பட சாத்தியங்கள் உருவாகியிருக்கும் என்று பல்வேறு ஊகங்களும் தெரிவிக்கப்படுகின்றன. எனினும், உண்மை நிலைமையை வடகொரியாவே விளக்க வேண்டும்.

எப்படியிருந்தாலும் இந்த விபத்து வடகொரியாவின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

ஏற்கனவே வடகொரியா, சக்தி, உணவு மற்றும் பணத்துக்குப் பெரும் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் வறுமையால் வாடி கடந்த ஆண்டுகளில் இறந்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விபத்து வடகொரியப் பொருளாதாரத்தை மேலும் மோசமாகப் பாதிக்கும். அத்துடன், வடகொரியாவின் விநியோக வலைப்பின்னலையும் இது மிகபெருமளவில் உருக்குலைத்துவிடும் என்று கூறப்படுகின்றது.

(ஐ-க)

# மைக்கல் ஜக்சன் மீது குற்றச்சாட்டு பதிவானது

லொஸ்ஏஞ்சல்ஸ்.ஏப்.24

சிறுவனிடம் தகாத முறையில் நடந்து கொண்டது தொடர்பான வழக்கில பொப் பாடகர் மைக்கல் ஜக்சன் (45) மீது நீதிமன்றத்தில் புதன் கிழமை குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டது.

இத்தகவலை ஜக்சனின் உதவியாளர் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

எப்போது விசாரணை நடைபெறும் என்று தெரியவில்லை. ஏப்ரல் 30 ஆம் திகதி அவரிடம் குற்றப்பத்திரிகை ஒப்படைக்கப்படும். அதற்காக அவர் சாந்தா பார்பரா கோர்ட்டுக்குசெல்ல வேண்டியுள்ளது என்றார் உதவியாளர் ஏ.டி.கிங்.

ஜக்சன் எங்கிருக்கிறார் என்ற விவரத்தை அவரது உதவியாளர் தெரிவிக்கவில்லை.

லொஸ்ஏஞ்சல்ஸின் சாந்தா பார்பரா பகுதியில் ஓர் ஆண்டுக்கு முன்பாக 12 வயது சிறுவனுக்கு மது கொடுத்துத் தகாத முறையில் நடந்து கொண்டார் என்று அவர் மீது புகார் எழுந்தது. இதையடுத்து அவர் நவம்பரில் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் சில புகார்களும் அவருக்கு எதிராக பதிவு செய்யப்படும் என்று தெரிகிறது. (ஐ)



தலை ஒட்டிப் பிறந்த பிலிப்பைன்ஸ் இரட்டையர்களையே படத்தில் காண்கிறீர்கள். கிளாரன்ஸ், கார் அக்குரி ஆகிய இந்த இரட்டையர்கள் நேற்று நியூயோர்க்கில் தங்கள் இரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய போது எடுக்கப்பட்ட படம்.

# இந்தியரும் - பாகிஸ்தானியரும் தமது பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பார்கள்

## அமெரிக்க அதிபர் புஷ் நம்பிக்கை

வாஷிங்ரன்,ஏப்.24

உலக அமைதி கருதி இந்தியாவும் - பாகிஸ்தானும் தங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொளவார்கள் - என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வாஷிங்ரனில் நடந்த பத்திரிகை ஆசிரியர்கள் கூட்டத்தில் பேசிய போது அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்-

இந்தியா - பாகிஸ்தான் உறவில இப்போது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். எனக்குச் சரியாக நினைவில்லை. இங்கு வெளியுறவுக் கொள்கை தொடர்பாகத் தகவல் திரட்டும் நிருபாகளும அதிகமில்லை. 2001 என்று கருதுகின்றேன். பாகிஸ்தானையும் இந்தியாவையும் சமாதானப்படுத்தி போர் ஏற்படாமல் தடுக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.



அந்தப் பகுதிக்குள் முதலில் வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் சென்றார். பின்னர் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜாக் ஸ்ரோ சென்றார். அதைத் தொடர்ந்து வெளி யுறவுத் துணை அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் சென்றார். அவர்கள் அனைவரும இரு நாடுகளும் போரைத் தவிர்க்க வேண்டுமென்று எல்லோரிடமும் வலியுறுத்தினர்.

இப்போது அங்கு நிலைமை தலைகீழாக உள்ளது. இரு நாடுகளுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளன.

உலக அமைதி மற்றும் அப்பகுதியின் ஸ்திரத்தன்மை கருதி முக்கிய பிரச்சினைகளை இதில் அவர்கள் தீர்த்துக் கொள்வார்கள் என நம்பலாம். அதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நான் கருதுகிறேன். ஆனால், நாம் எப்போதும் கூட்டணியைப் பலப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார். தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காகப் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கு அப்போது அதிபர் புஷ் பாராட்டுத் தெரிவித்தார். (ஐ-க)

## ஈராக் தாக்குதலுக்கு அல்கெய்டாவே காரணம்

பக்தாக்,ஏப்.24

ஈராக்கின் தெற்கு நகரமான பாஸ்ராவில் புதன்கிழமை நடைபெற்ற தொடர் தாக்குதல்களுக்கு சர்வதேச தீவிரவாத அமைப்பான அல்கெய்டா தான் காரணம் எனப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கூட்டணிப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீவிரவதிகள் நடத்திய தொடர் தாக்குதலில் 68 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் 20 பேர் பள்ளிக்குழந்தைகள்.

இது அல்கெய்டா தற்கொலைப் படையினரின் சதிவேலையாக இருக்கக்கூடும். வழக்கமாக மேற் கொள்ளும் தாக்குதலையே இதிலும் அல்கெய்டா கடைப்பிடித்துள்ளது என்று பெயர் குறிப்பிட விரும்பாத கூட்டணிப்படை அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

# இஸ்ரேலியரின் தாக்குதலில் பலஸ்தீனச் சிறுமிகள் பலி!

காஸாவின் வடபகுதியில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய திடீர்த் தாக்குதலில் பலஸ்தீனச் சிறுமிகள் இருவர் உயிரிழந்தனர். 4வயதுச் சிறுமி ஒருத்தியும் 11 வயதுச் சிறுமி ஒருத்தியுமே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெய்ட்லாகியா என்ற இடத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் 16 வயதுச் சிறுவன் ஒருவனும் உயிரிழந்தான். இவனும் 11வயதுச் சிறுமியும் இஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தனா என்று பலஸ்தீன மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்த மற்றைய நான்கு வயதுச் சிறுமி கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டு இறந்தார் என்று டாக்டர் மொஹமட் அல்-அஸாலி தெரிவித்தார். அளவுக்கதிகமான புகையை சுவாசித்ததனால் சிறுமியின் தோல் நீல நிறமாக மாறி விரைவிலேயே அவள் இறந்து போனாள் என்றார் அவர்.

கடந்த மூன்று தினங்களாக பெய்ட் லாகியாவில் உள்ள கட்டடங்களையும், வீடுகளையும் இஸ்ரேலியப் புலடோசர்கள் இடித்து தரைமட்டமாக்கின. பலஸ்தீனச் சிறுவர்களும் சிறுமிகளும் இந்த புல்டோசர்கள்மீது கற்களை வீசித்தாக்கி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதன்போதே இஸ்ரேலியர் அவர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

அந்தப் பகுதியில் இருக்கும் கட்டடங்கள் இப்போது அங்கு இருக்க பொருத்தமற்றவை என்பதால் அவை அழிக்கப்படுகின்றன என்று தெரிவித்தார் இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர்.

இஸ்ரேலியப் படையினர் நடத்திய மற்றுமொரு தாக்குதலில் பலஸ்தீன ஆயுததாரிகள் மூவர் கொல்லப்பட்டனர். மேற்குக்கரையில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் தியாகிகள் படையணியைச் சேர்ந்த மூவரே உயிரிழந்தனர்.

இதற்கிடையில் -

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தன்னிச்சையாக அறிவித்துள்ள மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தினால் காஸாவில் பதற்றம் மேலும் அதிகரித்து வருகிறது. ஷெரோனின் திட்டப்படி இஸ்ரேலியப்படைகள் காஸாவின் ஜெய்சி குடியிருப்புகளில் இருந்து வாபஸ் பெறப்படும்.

அவ்வாறு படைகள் வாபஸ் பெறப்பட்ட பின்னர் ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலியப் பகுதிகளுக்குள் இலகுவாக ஊடுருவித் தாக்குதல்களை நடத்தாமல் இருப்பதற்காகவே இஸ்ரேல் ஹமாஸ் இயக்கத் தலைவர்களை இலக்குவைத்துக் கொல்லுகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## 9 பேர் உயிரைக் காவு கொண்ட

# பிரேஸில் சிறைக் கைதிகளின் கலகம் முடிவுக்கு வந்தது

றியோடிஜெனீரோ,ஏப்.24

9 பேர் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த பிரேஸில் சிறைக் கைதிகளின் கலகம் முடிவுக்கு வந்துள்ளது. இதனை அடுத்து கைதிகளால் பிடித்துவைக்கப்பட்டிருந்த 170 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் சிறையில் உள்ள தமது உறவினர்களைப பார்வையிட வந்தவர்கள் இவர்கள்.

அமேசன் மாநிலத்தில் உள்ள உர்சோ பிராங்கோ என்ற சிறையிலேயே இந்தக் கலகம் இடம்பெற்றது. கைதிகளால் முன்வைக்கப்பட்ட அநேகமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து கலகம் முடிவுக்கு வந்தது என்று அதிகாரிகள் கூறினர்.

அளவுக்கதிகமான ஆள்தொகையைக் குறைக்கவேண்டும், சிறைச்சாலை ஆளுநர் இராஜினாமாச் செய்யவேண்டும் கைத்தொலைபேசிகளைச் சிறையில் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும் போன்ற 20 கோரிக்கைகளை முன்வைத்தே கைதிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.

சிறைச்சாலை ஆளுநர் மாற்றப்பட்டும், 30 கைதிகள் இடம்மாற்றப்பட்டும் கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவர்களின் 20 கோரிக்கைகளில் 17 கோரிக்கைள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சிறையிலிருந்த இரு கோஷ்டியினர் இடையே ஏற்பட்ட மோதல்களே கலகத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. கலகத்தின்போது ஒருவரது தலை வெட்டப்பட்டு சிறைச்சாலைக் கூரை வழியாக நிலத்தில் எறியப்பட்டது.

மற்றொருவர் கொலை செய்யப்பட்டு அவரது உடற் பாகங்கள் சிறைச்சாலைக்கு வெளியே எறியப்பட்டன. இவ்வாறு குறைந்தது 9 பேர் இந்தக் கலகத்தில் கொல்லப்பட்டனர்.(ஐ-க)

# நேரத்தை வீணடித்து விவகாரங்களில் மூழ்காதீர்; ஆனந்தமயமான ஆண்டவனை வழிபடுங்கள்

## ஆன்மீகத் தொடர் சொற்பொழிவில் அறிவுரை

சுவாமி சைதான்யா தனது தொடர் சொற்பொழிவின் இறுதி நாளையும் வழமைபோல் பஜனையுடன் ஆரம்பித்தார். ஆதிசங்கராச்சாரியார் வடமொழியில் இயற்றிய 'மன்னிப்பாயா' என்ற நூலின் ஒன்பதாவது சுலோகத்துடன தமது அன்றைய விரிவுரையை ஆரம்பித்தார்.

இந்தச் சுலோகம் சிவபெருமானின அற்புத அழகிய தோற்றத்தினை வர்ணிக்கின்றது. வளர்பிறையினால் ஒளிர்வாக்கப்பட்ட சடாமுடியை உடையவனே! காமதேவனை எரித்தவனே! என்று சுலோகம் வர்ணித்துக்கொண்டே செல்கின்றது சிவபெருமானைத் தியானித்து வந்தால் காமத்தை வென்று விடலாம் இறைவனிடம் பூரண சரணாகதி அடைந்தால்தான் இதனைச் செய்ய முடியும்.

எந்த மூர்த்தியை நாம் தியானிக்கின்றோமோ எந்த தியான மூர்த்தியின் நற்குணங்கள் நமக்கு வந்துவிடும். காமம் இயற்கையான உணர்வு. முறைதவறி அதில் மூழ்கி விட்டால் தான் அனர்த்தம். சிவபெருமான் பாமபினை ஆபரணமாக அணிந்துள்ளார். அந்தப் பாம்பிற்கு ஏன் அதிகமான இடம்? மனம் பாம்புபோன்றது. மனதிலும் விஷம் இருக்கின்றது. சிவபெருமான் பாம்பைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் ஆபரணமாக அணிந்துள்ளார்.

நாம் எமது மனதை ஆளுமைக்குள் வைத்திருக்க வேண்டும். மனம் பூஷணமாக இருக்கவேண்டும். ஊறு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மூன்று உலகத்திற்கும் சாரமாக, ஆதாரமாக இருப்பவன் இறைவன். உலகத்தில் சாரம் இல்லை.

### மனிதனுக்கும் ஞானக்கண்!

உண்மையில் உலகத்தின்சாரம் உள்ளத்தில் தான் இருக்கின்றது. சிவபெருமானுக்கு மூன்றாவது கண்ணாக ஞானக்கண் இருக்கின்றது. ஏன் எமக்கும் மூன்றாம்கண் இருக்கின்றது என்றார்.

அவ்வேளை சபை ஆச்சரியப்பட்டது.

யோகம், தியானம் மூலம் நாமும ஞானக்கண்ணைப் பெறலாம் என சுவாமி விளக்கினார். மக்கள் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மனை அதிகம் வணங்குவதில்லை. அழித்தலைச் செய்யும் சிவனைப் பெரிதும் வணங்குகின்றனர். உண்மையில் அழிவிலிருந்து தான் ஆக்கம் வருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சுவாமி செய்தியொன்று கூறினார்.

யப்பான் தேசத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே பெரும்பாலானவர்கள் நூறு வயதிற்கு மேற்பட்டவர்கள். மிகவும் தள்ளாமை கொண்டவர்கள். இவர்களைப் பீப்பாய்க்குள் போட்டு மலையிலிருந்து உருட்டிவிடுவது அந்த நாட்டில் ஒரு சில இடங்களில் வழக்கம். முதுமை கொடுமையாக மாறிவிடுகிதே.

அகங்காரத்தை அழிப்பவன் ஆணடவன். எனவே, எமது முழுமனதையும் அவனிடமே வைத்திருக்க வேண்டும் இறைவா! எனக்கு நீ தான் வேண்டும் என்று ஆதிசங்கரர் மனமுருகி வேண்டியதை சுவாமி எடுத்து விளக்கினார். அவர் எமது வாழ்க்கையை எடுத்து விளக்கினார்.

பெரிய செல்வந்தர், உயர் அதிகாரி போன்றோரைச் சுற்றிப் பலர் வருவது வழக்கம் அதில் பலர் சுயநன்மை கருதித்தான் வருவதுண்டு. ஆனால், சிலர் உண்மையான அன்புடன் அவர்களோடு உறவுபேணுவார்கள். எனவே உண்மையாக அன்பு காட்டுகின்றவர்களைத் தானே நாம் நேசிப்போம்! இறைவன் நமக்கு கிடைத்தால் அதுவே பெரிய வெற்றி.

### கடவுள் இருக்கும் இடத்தில் வெற்றி

இங்கே பாரதக்கதையை மேற்கோள் காட்டினார் சுவாமி. கிருஷ்ணனிடம் துரியோதனனும் அர்ச்சுனனும் உதவிவேண்டினர். ஒரு பக்கத்தில் எந்த ஆயுதமும் இல்லாமல் கிருஷ்ணன். மறுபக்கத்தில் அவனது பலம்வாய்ந்த படைகளும் போர்க்கலங்களும். எதுவேண்டும் என்று கேட்டபோது கிருஷ்ணன்தான் வேண்டும் என்றான் அர்ச்சுனன். இதுகண்டு மூடத்தனமாக களிப்பெய்திய துரியோதனன், படைபலமே வேண்டுமென்றான். கடவுள் எங்கே இருக்கிறானோ அங்கே தான் வெற்றி. இறைவனிடம் "அதைத்தா! இதைத்தா!" என்று கேட்கவேண்டியதே இல்லை என்று எடுத்து விளக்கினார் சுவாமி.

பத்தாவது சுலோகம் பற்றிய விளக்கம் தொடர்ந்தது. செல்வத்தினால் பயனே இல்லை. வீடு, பொருள் எல்லாமே அழிந்துவிடும். ஏன் உறவுகள கூட அழிந்து விடுவர். இவை நிரந்தரமானவை இல்லை. இச்சந்தர்ப்பத்தில் இன்றைய உலக நடவடிக்கைகளை எடுத்துக்காட்டினார்.

குஜராத்தின் கொடிய பூகம்பம் ஒரு நொடியில் எல்லாவற்றையுமே அழித்தது. சதாம் ஹூசேன் வளைத்து சிறை செய்யப்பட்டார். ஏன்? தமிழ் மக்கள் இங்கே வாழ்விடங்களை இழந்து அகதிமுகாம்களில் இருக்கிறார்களே! 'கான்சர்' என்ற புற்றுநோய் எப்போது யாரைத்தாக்கி அழிக்குமென்று சொல்ல முடியுமா? ஒரு நொடியில் எல்லாமே அழிந்து விடும். இதை உணர்ந்து இவை மீது கண்மூடித்தனமான பற்றை விட்டுவிடுங்கள்.

குருவின் வாக்கின்படி இறைவனை வழிபடு என்றார் சுவாமி. ஆத்ம இலாபத்திற்காக ஆனந்தமயமான ஆண்டவனை வழிபட வேண்டும். அவனே பூரணமானவன். உலகம், உலகவாழ்வு எல்லாமே நாடகம் போன்றவை. எதுவுமே சொந்தம் இல்லை. காதறுந்த ஊசியும் கடைசிவரை வராதே. தர்மமாகச் சம்பாதித்து பகிர்ந்து வாழ வேண்டும்.

எமது வாழ்வு மரணத்தை நோக்கிச் செல்கின்றது. ஆயுள் குறைந்தே செல்கின்றது. ஒவ்வொரு பிறந்த நாளும் ஆயுள்குறைவதைக் காட்டுகின்றது. நாமோ "ஹப்பி பேர்த்டே" என்கின்றோம். மெழுகுதிரிகளை ஊதி அணைக்கிறோம். விளக்கை அணைப்பது வேடிக்கைதான். எமக்கு என்ன நடக்கும் என்பது தெரியாமல் வாழ்கின்றோம். இளமை தேய்ந்து கொண்டே செல்கிறது நேரத்தை வீணடிக் கக்கூடாது. விகாரங்களில் கண்மூடித்தனமாக மூழ்கிவிடக்கூடாது. சென்ற நேரமும் நாளும் ஒருபோதும் திரும்பி வரவே வராது. காலமானது உலகத்தை பட்சணமாக விழுங்கிக் கொண்டிருக்கின்றது. வாழ்க்கை மின்னலைப்போன்றது. செல்வமும் குளத்து அலைபோல் அழிவதுதான். இறைவன ஒருவனே எமது சரணாகதி-என்றார்.

இதன்பின் பன்னிரண்டாவது சுலோகத்தைச் சுவாமிகள் விளக்கினார். கருணாகரனே! உனக்கு வெற்றி உண்டாகுக! எம்மை மன்னித்து ஆட்கொள்வாயா எமது ஞானயக்ஞம் இனிதே ஆனந்தமாக நிறைவேறியது என்று சுவாமிகள் விரிவுரையை மங்களகரமாக நிறைவுசெய்தார்.

### சமய வளர்ச்சிக்கான திட்டங்கள்

சுவாமிகள் இந்துசமய வளர்ச்சிக்குரிய தமது செயற்றிட்டங்கள் குறித்து எடுத்து விளக்கினார்.

மே முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை வவுனியாவில் இளைஞர்பாசறை நடைபெறும். மாணவர்களையும் இளைஞர்களையும் பங்குபெறவரும்படி வேண்டினார். ஐநூறு ரூபா செலவுக்கட்டணமாகும். ஆன்மிகப் பல்கலைக்கழகத்தினை மலைநாட்டில் ஆரம்பிக்க இருப்பதாகவும் சொன்னார்.

சுமார் எழுபது இலட்ச ரூபாய் செலவில் பிரமாண்டமான இந்துக் கண்காட்சியை ஐந்து இடங்களில் நடத்தி முடிக்கத் திட்டம் உள்ளதாகவும் கூறினார். யாழ்ப்பாணத்திலும இக்கண்காட்சி நடைபெறும். அதன் பொருட்டு இளைஞர்கள், மாணவர்கள், பெரியோர்களின் சேவையையும் வரவேற்பதாகக் கூறினார் சுவாமிகள்.

(தொகுப்பு:சுடர் மகேந்திரன்)

### ஆண்டுவிழா

வலி.வடக்கு.ஏப்.24

கியூடெக் நிறுவனத்தின் மதுவிலக்கு செயற்றிட்டத்தின் ஏ.ஏ. குழுவினரின் 2ஆம் ஆண்டு விழா நாளை காலை ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு கியூடெக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். மரியதாசன் கலந்துகொள்வார். (எ-180)

### மீளக்குடியமரும் மக்களுக்கு அடிப்படை வசதிகள்

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மக்கள் மீளக் குடியமர்ந்துவரும் ஆழியவளை, உடுத்துறை ஆகிய கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன. இதற்காக 'நிக்கொட்' நிறுவனம் 1 கோடி 40 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி, சுழற்சிமுறையில் கடன், சுயதொழில் வாய்ப்பு ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. (ஐ-ரி)


**சாரதி தேவை**

இ. போ. சவில் சாரதியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற சாரதி ஒருவர் தேவை.

S.V. குணபாலன்
239, பிரதான வீதி,
(31253) யாழ்ப்பாணம்.

ஜோ-எகட்டனின்
ஜெசித்தாரா
உங்கள் விருந்தகம் - தரும்
மதுால் சிக்கன் புரியாணி
ரூபா 160/= மட்டுமே!
முதலில் பதிவுசெய்தவர்களுக்கு முதலில்
மற்றும் உணவுப் பொதிகள் வழமைபோல்
11.30 முதல் 3.00 மணிவரை.
மனைக்கு வெளியே ஒரு மனை
ஜெசித்தாரா
மகளிர்கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(C-34623) T.P: 222- 7227

Jayoda ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
டிக்கட் தொடர் இல. 7143106 முதல் 7153374 வரை
சீட்டிழுப்பு இல. 26 திகதி 22-04-2004

வெற்றி எண்கள் 0 1 0 2 8 8 சுப்பர் எண் 2

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,77,43,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றியாளர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,77,43,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 91 | 5,000/- | 4,55,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 907 | 500/- | 4,53,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,046 | 50/- | 4,52,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 89,668 | 10/- | 8,96,680/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 88 | 1,000/- | 88,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 905 | 100/- | 90,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,962 | 20/- | 1,79,240/- |
| மொத்தம் | 1,09,685 | | 41,05,220/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 41,05,220/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,79,94,600/-

7145799-0-32
7145355-8-54
7149511-6-69
7145184-7-85
7144243-3-82

அபிவிருத்தி லொத்தர் சபை

யாழ்.....
வர்த்தகர்களுக்கான....
அட்டகாசமான சலுகை உங்கள்
சக்தி T.V.யில் விளம்பரம் செய்வதற்கு
ரூபா 17,500 மட்டுமே! 10 நாள்களுக்கு
☆ உடனடியாக தொடர்பு கொண்டு உங்கள் விளம்பரங்களை பதிவு செய்து கொள்ளவும்.
தொடர்பு: ஏக முகவர்
ஜோ.எகட்டன்
செனித்மார்கட்டிங் அண்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே 222 - 7227, பக்ஸ் 222 - 7227
தமிழ்மொழியின் சக்தி - உங்கள் சக்தி -
யாழ்.மண்ணில்!
(சி-34622) (21-12-11)


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னமலர் அம்பலவாணர்



மாதகல் மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் கோப்பாய் வடக்கைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னமலர் அம்பலவாணர் அவர்கள் நேற்று (23.04.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் கந்தையா அம்பலவாணர் அவர்களின் அன்பு மனைவியும் மாதகல் வடக்கு காலஞ்சென்ற பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் மகளும் அமிர்தநாதன், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் அமிர்தராணி, அருச்சுணராசா (ஜெயா வைன்டிங் வேக்ஸ்), அமிர்தமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராணி, செல்லத்துரை, குமரகுரு, சிவரதி, தில்லைக்கண்ணன் ஆகியோரது பாசமிகு மாமியாரும் தர்ஷினி, தனராஜ், அருள்குமார், யனு, அருள்நாயகி, அன்புக்கரசன், பானுஷா, இரஜீவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-04-2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கோப்பாய் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ.அருச்சுணராசா.
(மகன்)
(ஜெயா வைன்டிங் வேக்ஷ்.)

கோப்பாய் வடக்கு.
(31254)(43-21-11-12)

உதயன்

# நாடாளுமன்றத்தில் நல்லதோர் படிப்பினை

"விடுதலைப் புலிகள்" விடயத்தில் அவர்களைப் பிரித்து வைத்து அதில் குளிர்காய எண்ணினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஆனால், ஆப்பிழுத்த குரங்காக அவர் அந்தரிக்க வேண்டியதாயிற்று" - என்று கருணா விவகாரத்தில் ஜனாதிபதி நடந்து கொண்ட விதத்தை அண்மையில் விமர்சித்திருந்தார் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

அந்த விடயத்தில் மட்டுமல்ல, நாட்டின் அரசியல் விவகாரங்களிலும் அவரது நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலைமையை ஒத்ததுதான்!

தன்னை மட்டுமல்லாமல் முழு நாட்டையுமே ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்குக் கொண்டுபோய் அவர் சிக்க வைத்திருப்பதுதான் வேதனை.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பது போல தன்பாட்டில் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்து, அதன் மூலம் இப்போதைய அரசியல் குழப்பங்களுக்கு வழிவகுத்திருக்கின்றார் ஜனாதிபதி.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவையொட்டி நடந்த நிகழ்ச்சிகள், ஜனாதிபதிக்கும் அவரது 'அரைகுறைப் பெரும்பான்மையைக் கொண்ட' அரசுக்கும் நல்ல படிப்பினை.

நாடு எத்தகைய 'இரண்டுங் கெட்டான்' அரசியல் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றது என்பதை உணர்த்துவதற்கு அங்கு நடந்த அந்தச் சம்பவங்கள் நல்ல உதாரணங்கள்.

சபாநாயகர் தெரிவில் கூட, தனது தரப்பு வேட்பாளருக்கு வெற்றி வாங்கித் தரக்கூடிய பெரும்பான்மையைக் கொண்டிராத இந்த அரசின் மூலம்தான் அரசமைப்பை மாற்றுவதற்கு முயல்கிறார் ஜனாதிபதி. 'கூரை ஏறிக் கோழிபிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போனானாம்!' - என்பது போல இருக்கின்றது ஜனாதிபதியின் முயற்சி.

அதுமட்டுமல்ல, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் - அரசுத் தரப்பின் - எம்.பிக்கள் நடந்துகொண்ட விதத்தைப் பார்த்தால் ஈழத் தமிழருடன் சமாதானப்பேச்சு நடத்தும் - அமைதி முயற்சியில் ஈடுபடும் - எண்ணமே ஜனாதிபதியின் - அரசின் - தரப்புக்கு இல்லையோ என்பதுபோல் படுகின்றது.

ஈழத் தமிழரோடு சமாதானம் பேசி, அமைதித் தீர்வு காண்பேன் என்று கூறி 1994 இல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அப்போது அமைதி நடவடிக்கைகளைப் புறம்ஒதுக்கி, 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் ஈழத்தமிழர்கள் மீது பேரழிவு தந்த கொடூரப் போரைத் திணித்தார்.

2004 இல் அதே சரித்திரம் திரும்புகின்றதோ என்ற சந்தேகத்தை நாடாளுமன்ற நிகழ்வுகள் உருவாக்கியுள்ளன.

ஈழத்தமிழ் மக்களில் சுமார் 90 சதவீதத்தினரின் ஆதரவோடு - ஆணையோடு - நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தவர்கள் தமிழ்க் கூட்டமைப்பினர். அவர்களின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் புதிய சபாநாயகரை வரவேற்று உரையாற்ற முற்பட்ட சமயம் ஜனாதிபதியின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்க உட்பட ஆளும்கட்சி உறுப்பினர்கள் அவரை உரையாற்றவிடாமல் - தகாத வார்த்தைகளால் கூட - திட்டித் தீர்த்துக் கூச்சலிட்டுக் குழப்பினர்.

'கொட்டியா!', 'கொட்டியா!!' (புலி! புலி!!) என்று அரசுத் தரப்பு எம்.பிக்கள் எழுந்து நின்று கூச்சலிட்டுக் குழப்பியதும் தமிழ் எம்.பிக்களின் பால் அவர்கள் காட்டிய வெறுப்பும், கோபமும், பகைமையும், குரோதமும் இந்த எம்.பிக்களைக் கொண்ட அரசா தமிழ் மக்களுடன் சமாதானஞ்செய்து இணக்கத் தீர்வைக் காணப்போகின்றது என்ற உறுதியான சந்தேகத்தை எடுத்த எடுப்பிலேயே ஏற்படுத்திவிட்டன.

தவிரவும், சபாநாயகர் தெரிவு முடிந்ததும் ஆளுங்கட்சி எம்.பிக்கள் சபையைச் சந்தையாக மாற்றும் விதத்தில் அநாகரிகமாக நடந்துகொண்ட விதம் அவர்கள் எந்தத் தரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் புட்டுப்புட்டுக் காட்டிவிட்டது.

இப்படி, இனக்குரோதத்தில் ஊறித்திளைத்து, பேரினவாதம் கொப்பளிக்கும் போக்குடைய - தகராறு பண்ணும் - பெருங்கூட்டத்தைத் தன்னோடு அணி சேர்த்துக் கொண்டுதான் அமைதி, சமாதானம், இணக்கத் தீர்வு ஆகியவை குறித்து ஆலாபரணம் பண்ணுகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஜனாதிபதி தரப்பின் செயற்பாடுகள் இணக்கத் தீர்வுக்கு இடமேயில்லை என்ற கருத்தை மேலும் மேலும் வலுப்படுத்தி வருகின்றன.

அமைதி முறையில் - சமாதான வழியில் - இணக்கத் தீர்வு என்பது 'கானல் நீராகவே' முடியுமோ என்ற அச்சத்தை வலுப்படுத்தும் - மேலும் உறுதிப்படுத்தும் - வகையில் அமைந்துள்ளன.



13 ஆவது நாடாளுமன்றின் முதலாவது அமர்வின்போது இடம்பெற்ற சபாநாயகர் தெரிவில் ஏற்பட்ட அமளிதுமளியை அடுத்து அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாக்குப் பெட்டியின் மேல் அமர்ந்திருப்பதையும் ஏனையோர் வாக்குவாதத்தில் ஈடுபடுவதையும் படத்தில் காணலாம்.

# பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படின் விவசாயிகளுக்கு அதிக நன்மை

## கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வலி.தெற்கு,ஏப்.24

புதிய அரசின் பொருளாதாரக் கொள்கைகளில் பாரிய மாற்றம் ஏற்படும் பட்சத்தில், விவசாயிகள் பெரிதும் நன்மையடைவார்கள்.

தமது விவசாயப் பொருள்களை கூடிய விலைக்கு சந்தைப்படுத்திக் கூடிய வருமானத்தையும் அவர்கள் பெறமுடியும்.

- இவ்வாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் தெரிவித்தார்.

உடுவில் கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலைய திறப்புவிழா நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய சம்மேளனங்களின் சமாசத்தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் க.சுந்தரேசன் மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. கமநலசேவை நிலையத்துடன் விவசாயிகள் நெருக்கமான உறவைக் கொண்டிருக்க வேண்டும். விவசாயிகளின் நன்மைகருதி திறக்கப்பட்டுள்ள இந்த விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையத்தை உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதன்மூலம் அதிக நன்மைகளைப் பெறவேண்டும்.

தென்பகுதியில் உள்ள விவசாய சம்மேளனங்கள், விவசாயத் திணைக்களங்களுக்கு வழங்கப்படும் நிதியைக் கொண்டு கடன்கள் பெற்று தம்மை வளர்த்துக் கொள்கின்றார்கள். தாம் பெறும் கடன் பணத்தை உரியமுறையில் விவசாயத்துறையில் ஈடுபடுத்தி பயனடைவதுடன் கடன்தொகையையும் இலகுவாகச் செலுத்துகிறார்கள்.

எமது பிரதேச விவசாயிகளும் அதேபோல கடன்களைப் பெற்று விவசாயத்தை வளர்த்து பயனடைவதோடு கடன்களையும் மீளச்செலுத்தவேண்டும்.

விவசாய சம்மேளனங்களின் சிபார்சுக்கமைய ஒரு விவசாயி 15ஆயிரம் ரூபாவைக் கடனாகப்பெறலாம். அதேபோல கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளரின் சிபார்சின் கீழ 5 லட்சம் ரூபா வரை கடன்பெறலாம்.

வங்கிகள் இன்று போட்டிபோட்டு கடன்கள் வழங்க முன்வருகின்றன. ஆனால், நாம் அவர்களைப்போல கடன்களை வழங்க முடியாது. ஒரு தொகுதியைப் பணமாகவும், மிகுதியை உள்ளீடுகளாகவுமே எம்மால் வழங்கமுடிகிறது.

சந்தைகளில் வியாபார முயற்சிகளில் ஈடுபடும் விவசாயிகள் தமது சம்மேளனத்தின் சிபார்சுடன் காலையில் ஒரு தொகைப் பணத்தைக் கடனாகப்பெற்று, சந்தை வியாபாரம் முடிவடைந்ததும் மாலையில் ஒருசிறுதொகை வட்டியுடன் கடனை மீளச் செலுத்தமுடியும்.

இத்தகைய சிறந்த நன்மைகளைப்பெற விவசாயிகள் கமநலசேவை நிலையங்களுடன் தொடர்பையும் நல்லுறவையும் பேணவேண்டும் - என்றார்.

(எ-152)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நிலவும் குறைகளை நிவர்த்திசெய்யக் கோரிக்கை

கிளிநொச்சி,ஏப்.24

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் காரணமாக நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இதுதொடர்பாக சுகாதாரத் திணைக்களம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று வைத்தியசாலை அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நாளாந்தம் சுமார் 750 முதல் 800 பேர் வரையிலான வெளிநோயாளர்கள் சிகிச்சை பெறவருகின்றனர். இதுதவிர வைத்தியசாலையில் தங்கியிருந்தும் நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்த வெளிநோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குப் போதுமான வைத்தியர்கள் இல்லை என்று வைத்தியசாலை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் ஒன்றரை லட்சம் பேர் வசிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் வைத்திய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக 25 வீதமான வைத்தியர்கள் கூட இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(8-ரி)

# யாழ். பஸ் நிலையத்திலிருந்து மிருசுவிலுக்கு மாலைநேர பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். மத்திய பஸ்நிலையத்திலிருந்து மிருசுவிலுக்கு கனகன்புளியடி வழியாக மாலைநேர பஸ் சேவையொன்றை வடபிராந்திய போக்குவரத்துச்சபை கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

தினமும் மாலை 4.15 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையதில் இருந்து புறப்படும் பஸ் கனகன்புளியடி வழியாக மிருசுவிலைச் சென்றடைந்து பின்னர் அங்கிருந்து 5.30 மணிக்குப் புறப்பட்டு அதேவழியாக யாழ். நகரை வந்தடையும்.

யாழ். நகரில் இருந்து முகமாலைக்கான பஸ் மற்றும் மினிபஸ் சேவைகள் பிற்பகல் 3.45 மணியுடன் நிறுத்தப்படுவதினால் அதன் பின்னர் கொடிகாமத்திற்கு அப்பால் வதியும் மககளுக்குப் போதிய போக்குவரத்து வசதிகள் கிடையாமை பற்றி மிருசுவில் பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர். இதனை அடுத்தே இந்தப் புதிய பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-15)

## நாளை

சித்திரை 13
ஞாயிற்றுக்கிழமை
(25.04.2004)
திதி : ஷஷ்டி
பின்னிரவு 5.46 வரை.
நட்சத்திரம் : திருவாதிரை
இரவு 9.24 வரை
சுபநேரம்: 8.59 -10.29
ராகுகாலம்: 4.29 -5.59
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பொய்களால் விளையும் நன்மைகள் மிகக்குறைவு.

## ஊர்காவற்றுறையில்

# சட்டவிரோத மின் பாவனை: பெண் உட்பட 4பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஏப்.24

ஊர்காவற்றுறை மற்றும் தம்பாட்டிப் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்திய ஒரு பெண் உட்பட நால்வர் பொலீஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

ஊர்காவற்றுறைப் பொலீஸார், மின்சாரசபையின் வேலணை மின் அத்தியட்சகர் ஜேக்கப் செபஸ்தியாம்பிள்ளையின் மேற்பார்வையில் ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இந்த நாலவரும் சிக்கிக்கொண்டனர்.

இவர்கள் நால்வரும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர். நால்வருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ஜ-3)

# பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவது எப்படி?

## வர்த்தகர்களுக்கு செயலமர்வில் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

பொதுக்கூட்டங்களில் உரையாற்றுவது எப்படி? என்பது குறித்து வர்த்தக சமூகத்தினருக்கு - விளக்கும் செயலமர்வு ஒன்று இன்றும் - நாளையும் கொழும்பு ரேணுகா ஹோட்டலில் இடம்பெறவிருக்கின்றது.

ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் 'சமாதானத்தை நோக்கிய வர்த்தக அபிவிருத்தி' என்ற செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் செயற்படும் மூன்று வர்த்தக சங்கங்களில் இருந்து தலா இரு பிரதிநிதிகள் இந்தச் செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் ஏனைய மாவட்டங்களில் உள்ள வர்த்தக அமைப்புக்களும் இச்செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளன

(ஜ-ரி)

## முதலாவது பிறந்ததின வாழ்த்துக்கள்

# HAPPY BIRTHDAY



காரைநகர், களபூமியைச் சேர்ந்த
திரு. திருமதி சத்தியமூர்த்தி – மணிமேகலை
தம்பதிகளின்
செல்வப்புதல்வன்
செல்வன்

**கிருஷிபன்**

தனது பிறந்தநாளை காரை நகரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (24.04. 2004) சனிக்கிழமை வெகுவிமரிசையாகக கொண்டாடுகிறார்.

இவரை அவரது அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மம்மா, சித்தப்பாமார், அத்தைமார், சித்திமார் மற்றும் உறவினர்கள் காளியம்பாள் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*663, K.K.S. Road,*
*Jaffna.*

தகவல்:
வை.கந்தசாமி
(அப்பப்பா)

(31169) (21-42-13-12)

---

## முன்பள்ளி மாணவரின் ஆக்கக் கண்காட்சி

தென்மராட்சி முன்பள்ளி மழலைகளால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களின கண்காட்சி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி பிரதேசசபைச செயலாளர் குநபாலசந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் க.கணேசலிங்கம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-117)

---

## கடதாசிகள் விற்பனைக்கு

கடைகளில் பொருள்களைக் கட்டுவதற்கும் மற்றும் பெரிய பொதிகள் கட்டுவதற்கும், குறிப்பாக இறைச்சிக் கடைக்குப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான் தரமான தாள்கள் விற்பனைக்கு உண்டு. இது தவிர இக்கடதாசியினை என்வலப், கோவைப் பைகள் போன்ற தரமான (Stationaries) பொருள்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தலாம். தேவைப்படுவோர் நேரில் வந்து விவரங்களை அறிந்துகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
"உதயன்" பணிமனை,
இல. 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/34549)
(21-12-13-42)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/இடைக்காடு மகாவித்தியாலயம்
க.பொ.த. (சா/த) பரீட்சை டிசெம்பர் - 2003

(1) லட்சுமிகாந்தன் கிருத்திகா - 9A, B
(2) கணேஷமூர்த்தி கிருஷாந்தன் - 7A, B,C,S
(3) சத்தியமூர்த்தி சுமன் - 6A, 3B,C
(4) சிறியோகநாதன் காண்டீபன் - 6A, 2B,C
(5) சிவஞானசுந்தரம் சுகன்ஜா - 5A, 4B,S
(6) இராமநாதன் அஜந்தன் - 5A, 2B,S
(7) அமரசிங்கம் அபிராமி - 4A, 4B,2C
(8) முருகுப்பிள்ளை சுபாஜினி - 3A, 2C,4S

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை - 2003
(1) லக்ஷாயினி குஞ்சிதபாதம் - 129 புள்ளிகள்
(2) ஜெசிந்தா சரவணபவன் - 125 புள்ளிகள்

மேற்படி பரீட்சைகளில் சித்தியடைந்த அனைவரையும் கற்பித்த ஆசிரியர்களையும் வழிகாட்டி நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்..

பழைய மாணவர் சங்கம்,
(31162) (26-12-13-21) யா/இடைக்காடு ம.வி.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.தம்பையா கந்தசுவாமி
(J.P.)
(அகில இலங்கை சமாதான நீதிவான்)
இணுவில் கிழக்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர்
(பெஷன் ஹவுஸ் - யாழ்ப்பாணம்)

அவர்கள் (21-04-2004) அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி எஸ். நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டமையையிட்டு அவரை இணுவை சிவகாமி அம்மன் துணையுடன் சகல வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

இணுவில்

மருமகன்: செ.சர்வேஸ்வரன்
மகள்: கிருஸ்ணகுமாரி
பேர்த்தி: மதுராங்கி

(31178)(21-12-13)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### லயன் இளையவன் சிவஞானம்



புத்தூர், ஆவரங்கால் கிழக்கு மணல்பகுதியை வதிவிடமாகக் கொண்ட திரு. இளையவன் சிவஞானம் (ஜே.பி) அவர்கள் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி திரு. கே. பி. எஸ். வரதராசா அவர்கள் முன்னிலையில் 15. 04. 2004 வியாழக்கிழமை அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் ஆவரங்கால் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவரும், சிறி புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான தலைவரும், அச்சுவேலி லயன் கழக உறுப்பினரும், சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். இப்பதவி மூலம் அவரது சமூக சேவைகள் இன்னும் தொடரவும், மேன்மேலும் வளரவும் இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பேரப்பிள்ளைகள்
நனுசன். காருண்யன். வித்தகன். பகலவன். தூயவன். மலரவன். விதுர்சா. பிரசன்னியா. சாகித்யா. சிகாமி.

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(31163)(21-12-13)

---

## விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது

பொறியியற்பீட மாணவர்களின் தொகுப்பில்
உருவான க.பொ.த.உயர்தர மாணவர்க்கான

**பௌதிகவியல் - அலகுரீதியான வினாவிடைத் தொகுப்பு**

* கடந்த 10 வருட கால பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது.
* மாணவரின் அன்றாடக் கற்றலை இலகுவாக்க அரிய வாய்ப்பு.
* துரித மீட்டலுக்கு உகந்தது.

**எந்திரி வெளியீடு**

கிடைக்குமிடங்கள்:
யாழ்ப்பாணத்தில் - ஸ்ரீலங்கா, பூபாலசிங்கம், மண்டேலா
வலிகாமத்தில் - துர்க்கா (சுன்னாகம்), நாயகபாலன் (மானிப்பாய்)
தென்மராட்சியில் - துர்க்கை அம்பாள், நியூ அருண் (சாவகச்சேரி)
வடமராட்சியில் - சிதம்பரப்பிள்ளை,மொடேர்ன்(கரவெட்டி). நாவலர் (மந்திகை). கமலா (பருத்தித்துறை).
வன்னியில் - அறிவமுது (எட்டுக் கிளைகள்).

இவற்றை விட
NEW SCIENCE HALL, ஈசன், அறிவொளி கல்வி நிலையங்கள்.

(31179)(34-21-13-12)

---

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - திருநெல்வேலி - அரசடி

# ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

ஈழமணித் திருநாட்டின் சிகரமாய் விளங்கும் யாழ்ப்பாண நன்நகரின் வடபால் சான்றோர்களும் கலைஞர்களும் மிக்க திருநெல்வேலி மத்தியிலே அரசடியில் வீற்றிருந்து அடியார்களுக்கு அல்லல்கள் போக்கி அருள்பாலிக்கும் அன்னையாம் சிவகாமசுந்தரி அம்பாளுக்குத் திருவருளை முன்னிட்டு நிகழும் தாரண வருஷம் சித்திரை மாதம் 13ஆம் நாள (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்றுத் தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### விஷேச உற்சவங்கள்

01 ஆம் நாள் (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு **துவஜாரோகணம** (கொடியேற்றம்)
07 ஆம் நாள் (01.05.2004) சனிக்கிழமை மாலை **குதிரை வாகனம**
08 ஆம் நாள் (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை **சப்பறம்**
09 ஆம் நாள் (03.05.2004) திங்கட்கிழமை காலை **தேர்த்திருவிழா**
10 ஆம் நாள் (04.05.2004) செவ்வாய்க்கிழமை காலை **தீர்த்தம்** மாலை **திருவூஞ்சல்**, **துவஜாவரோகணம** (கொடியிறக்கம்) - சண்டேஸ்வரி உற்சவம் நடைபெறும்.
11 ஆம் நாள் (05.05.2004) புதன்கிழமை மாலை **பூங்காவனம்** - உபயம் திருநெல்வேலி இளைஞர்
12 ஆம் நாள் (06.05.2004) வியாழக்கிழமை மாலை **பிராயச்சித்த அபிஷேகம், வைரவ உற்சவம்**

| | | |
|---|---|---|
| குறிப்பு: | அபிஷேகம் | தினசரி காலை 8.30 மணி மாலை 4.45 மணி |
| | பூசை | தினசரி காலை 9.00 மணி மாலை 5.30 மணி |
| | ஸ்தம்ப பூசை | தினசரி காலை 9.30 மணி மாலை 6.00 மணி |
| | வசந்தமண்டபப் பூசை | தினசரி காலை 10.00 மணி மாலை 6.30 மணி |

மஹோற்சவ குருக்கள் - சிவஸ்ரீ சோ.நடராசக் குருக்கள் (திருநெல்வேலி)
ஆலய நித்திய அர்ச்சகர் - பிரம்மஸ்ரீ ஜெ.ஞானானந்தசர்மா (திருநெல்வேலி)
மங்கள இசை - நல்லூர் கணேஸ் குழுவினர்
பூமாலை அலங்காரம் - சீ.அருணன்

தேர்த் திருவிழா : 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
தீர்த்தத் திருவிழா : 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை அதைத் தொடர்ந்து தீர்த்த உற்சவம் நடைபெறும். மாலை 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் திருவூஞ்சலும் நடைபெறும். தொடர்ந்து துவஜாவரோகணம் (கொடியிறக்கம்) நடைபெறும். அடியார்கள் உற்சவ தினங்களில் அம்பாளின் அருட்காட்சிகளைக் கண்டு தரிசித்து அன்னையின் அருளைப்பெறுமாறு வேண்டுகின்றோம்.

முக்கிய குறிப்பு: பூசைகள் யாவும் பழைய நேரப்படி நடைபெறும்.

பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை:
**கனகா பத்திரிகை விற்பனையகம்**
இல. 06, பலாலி வீதி, நவீன சந்தை, திருநெல்வேலி.

(C/34603) (34-21-13-12)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பதவியின் கௌரவத்தைப் பேணி பக்கசார்பின்றிச் செயற்படுவேன்!

## புதிய சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.24

பதவியின் கௌரவத்தைப் பாது காக்கும் வகையில் பக்கசார்பின்றி கடமைபுரிவேன்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார.

சபாநாயகராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து நிகழ்த்திய முதலாவது உரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சபாநாயகர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் வேறுபாடுகளின்றிக் கடமையாற்ற நான் பணிக்கப்பட்டிருக கின்றேன். இதன்படி சகல நாடாளு மன்ற உறுப்பினர்களது உரிமை களும் நாட்டின் ஜனநாயகமும் பாது காக்கப்படும்.

புதிய நாடாளுமன்றத்தில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளையும், ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளையும் சேர்ந்த பல இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அதேபோன்று தமிழ் மக் களை சிறந்தமுறையில் பிரதிநிதித்து வம் செய்யும் இளம் தமிழ் எம்.பிக் களும் இம்முறை நாடாளுமன்றத் துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரதும் தெரிவு நாட்டுக்கும் நாடாளுமன்றத்துக்கும் வலிமை சேர்ப்பதாய் உள்ளது.

எந்த விதமான குற்றங்களையும் இழைத்து விடக்கூடாது என்ற எண் ணத்துடன் எனது பணிகள் தொட ரும் - என்றார். (எ-7-ரி)

### பயிற்சிநெறி நடைபெறும் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கிவந்த தேசிய கல்வி நிறு வக டிப்ளோமாப் பயிற்சி நெறி யாழ். இந்துக் கல்லூரியுடன் ஒரு நிலைய மாக இணைக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக் கப்பட்டதைத் தொடர்ந்தே இப்பயிற்சி நெறி ஒரு நிலையமாக மாற்றப்பட் டுள்ளது. மானிப்பாய் இந்துக் கல் லூரியில் இப்பயிற்சியினை மேற் கொண்டு வந்த ஆசிரியர்கள் யாழ். இந்துக்கல்லூரியில் தமது பயிற்சி களைத் தொடருமாறு கேட்கப்பட்டுள் ளனர். இப்பயிற்சியுடன் கல்விமாணிப் பயிற்சி நெறியும் புதிதாக ஆரம்பிக் கப்பட்டுள்ளது. (ஐ-6)

### கடுங்காற்றினால் வீடுகள் சேதம்

கொழும்பு,ஏப்.24

கம்பளை, உலப்பனைப் பிர தேசத்தை ஊடறுத்து வீசிய கடுங் காற்றுக்காரணமாகப் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த இயற்கை அனர்த்தத்தி னால் காயமடைந்த 6 பேர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உலப்பனை நக ருக்கு மேலாகச் சென்ற உயர் அழுத்த மின்சாரக் கம்பி பாதிக்கப்பட்டிருப் பதனால் மின்விநியோகமும் முற் றாகச் சீர்குலைந்துள்ளது. (ஐ-ரி)

### பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.24

இணுவில் பொது நூலகம், மற்றும சனசமூக நிலையம் என்பன இணுவில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையு டன் நடத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இணு வில் பொதுநூலக கலாசார மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வழிகாட்டல் கருத்தரங்கில் இணைந்த கணிதப் பாடம் தொடர் பாக எஸ்.சற்குணராஜாவும், பௌதிகவி யல் பாடம் தொடர்பாக குமரன் ஆசிரி யரும், கணக்கீடு பாடம் தொடர்பாக பாலவாசனும் கருத்துரை வழங்குவர்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவ ராஜாவும், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சற்குணராஜாவும், பரீட் சைப் புள்ளிகள் வழங்கும்போது கவ னிக்க வேண்டிய விடயம் பற்றிய கருத் துக்களை வழங்குவார்கள். (ஐ-ரி)

### கட்டாக்காலி நாய்கள் கைதடியில் அழிப்பு

கைதடி,ஏப்.24

கைதடிப்பகுதியல் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை கடந்த புதன்கிழமை தொடக்கம் நடை பெற்றுவருவதாக அப்பகுதிப் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள் ளார். இதனையொட்டி வளர்ப்பு நாய் களை வைத்திருப்போர் அவற்றைக் கட்டி வளர்க்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இந்நடவடிக்கை ஆரம்பமாகிய முதல் நாள் மட்டும் 30 நாய்கள் அழிக கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-75)

### சடலத்தை அடையாளங்காண உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். நகரின் மத்தியிலுள்ள வின ஸர் தியேட்டரின் பின்புறமாகவுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து கடந்த 16 ஆம் திகதி மீட்கப்பட்டவற்றில் இனங்காணப்படாத மற்றைய ஆணின சடலதனை அடையாளங்காண உதவு மாறு யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இனங்காணப்படாத இச்சடலத்தில் நீல நிறச் சேட் மட்டுமே காணப் படுகிறது என்றும் -

இச்சடலம் தற்போது யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது என்றும் - அறிவிக் கப்பட்டுள்ளது. (எ-9-15)

## ஜாதிக ஹெல உறுமயவின்

# பிக்கு எம்.பிக்கள் இருவர் அரசுப் பக்கம் பாய்ச்சல்!

ஜாதிக ஹெல உறுமயவின் பட் டியலில் கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய இரு பிக்கு எம்.பிக்கள் அரசின் பக்கம் சாய்ந்துவிட்டார்கள்.

கொழும்பு மாவட்டத்திலிருந்து 10 ஆயிரத்து 512 விருப்பு வாக்கு களுடன் தெரிவுசெய்யப்பட்ட வண. கட்டலுவ ரட்ணஸிய தேரரும், கம் பஹா மாவட்டத்திலிருந்து 7 ஆயி ரத்து 384 விருப்புவாக்குகளுடன் தெரிவுசெய்யப்பட்ட வண. அப்பரகே பங்ஞானந்த தேரருமே அணி மாறிய வர்களாவர்.

பொதுத்தேர்தல் முடிவுகள் அறி விக்கப்பட்ட பின்னர் இவர்களோடு தொடர்புகொள்வதற்கு ஜாதிக ஹெல உறுமயக் கட்சியினர் எடுத்த முயற்சி கள் பலிக்கவில்லை. ஆனாலும், ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பினர், அவர்கள் இருவரையும் அழைத் துச் சென்று மறைத்து வைத்திருக் கின்றனர் என்ற செய்திகள் வெளி யாகியிருந்தன.

இந்நிலையில், இவர்கள் இரு வரும் தமது எம்.பி. பதவியை இரா ஜினாமாச் செய்துவிட்டார்கள் எனத் தெரிவிக்கும் கடிதங்கள் நாடாளு மன்ற அலுவலகத்துக்குச் சமர்ப்பிக் கப்பட்டிருந்தன. ஆனால், அவர்கள் இருவரும் நாடாளுமன்ற அதிகாரி களைச் சந்தித்துத் தாங்கள் இராஜினாமாச் செய்யவில்லை என்று வலியுறுத்தி வந்தனர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் தனது முதலாவது அமர்வுக்காகக் கூடியபோது, இந்த இரு பிக்கு எம். பிக்களும் சபைக்குள் பிரவேசித்து அரசுத்தரப்பினருடன் அமர்ந்து கொண் டனர். எனினும், பின்னர் நாடாளு மன்ற அலுவல்கள் தொடங்கியதும் எதிர்க்கட்சி வரிசைக்குள் சென்று தங்களுக்கு என ஒதுக்கப்பட்ட ஆச னத்தில் அமர்ந்துகொண்டனர்.

சபாநாயகர் தெரிவுக்கான தேர் தல் ஆரம்பமானதும் ஹெல உறுமய வின் ஏனைய ஏழுபிக்கு எம்பிக்களும் சபையைவிட்டு வெளியேறினர். ஆனால், அணி மாறிய இந்த இரண்டு பிக்கு எம்.பிமார் மட்டும் சபையிலிருந்து வாக்களிப்பில் கலந்துகொண்டனர். (எ-க)

# அடுத்த வருட உயர்தரப் பரீட்சைக்கு ஏப்ரல் மாத இறுதிக்குள் பதிவுசெய்க!

## தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.24

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குப் பாட சாலைப் பரீட்சார்த்தியாகத் தோற்றாது முதல் தடவையாகத் தனிப்பட்ட பரீட் சார்த்திகளாகத் தோற்றவுள்ள விண் ணப்பதாரிகள், இம்மாதம் 30 திக திக்கு முன்பதாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளவேண்டுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

இவ்வகையான விண்ணப்பதாரி களில் 2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று 21 வயதுக் குக் குறைவாக உள்ளவர்கள், மேற் படி அமைச்சில் பதிவுசெய்த பின்னர் - பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் - தமது பிரயோகச் செயற் பாடுகளையும் பாட இணைப்புச் செயற்பாடுகளையும் பூர்த்திசெய்வது கட்டாயமானதாகும். அவர்கள் மதிப் பீடு மற்றும் நிபுணத்துவ அபிவிருத் திச் செயற்திட்டங்களை பூரணப்படுத் துவதற்காக இம்மாதம் 30 ஆம் திக திக்கு முன்னர் மனிதவள அபிவி ருத்தி, கல்வி, கலாசார அலுவல் கள் அமைச்சினுடைய பாடசாலைச் செயற்பாட்டுக் கிளையில் பதிவினை மேற்கொள்ளவேண்டும்.

மேற்படி திகதியில் 21 வயதுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்குப் பிரயோக மற்றும் பாட இணைப்புச் செயற்பாடுகளில் இருந்து விலக்களிக் கப்பட்டுள்ளது. இவர்கள் தேவையான செயற்பாடுகளை நிறைவேற்றிவிட்ட தாக விண்ணப்பப் பத்திரத்தில் உறு திப்படுத்தப்பட்டதும் பரீட்சைக்கு விண் ணப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

பதிவுசெய்த விண்ணப்பதாரி களுக்கு மேற்படி மதிப்பீடு மற்றும் நிபுணத்துவ அபிவிருத்திச் செயற் திட்டங்களைப் பூர்த்திசெய்வதற்காக பாடசாலையொன்று பெற்றுக்கொடுக் கப்படும்.

இதேவேளை -

மேற்குறிப்பிட்ட பிரயோக பாட இணைப்பு மற்றும் நிபுணத்துவ அபி விருத்தி ஒற்றைச் செயற்திட்டங்களைப் பூரணப்படுத்துவதற்காக யாழ்ப்பாணத தில் யாழ். மத்திய கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் க.இராச துரை அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை தொடர்பான மேல திக விவரங்கள் மற்றும் பதிவு செய் வதற்கான விண்ணப்பப் பத்திரங்களைக் கல்லூரியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அவர் மேலும் கூறினார். (எ-9-6)

# தீவகம் வடக்கில் பரவலாக குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை,ஏப்.24

தற்பொழுது நிலவும் கடும் வெப் பம் மற்றும் கடும் வரட்சி காரண மாக ஊர்காவற்றுறையின் கோட்டை யடி, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை ஆகிய கிராமங்களிலும் எழுவைதீவு பிரதேசத்திலும் குடிதண்ணீர் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது.

நன்னீர்க் கிணறுகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் பொது மக்கள் கிணறுகளில் இருந்து பெறப படும் நீரை வடிகட்டிப் பாவித்து வருகின்றனர்.

கடந்த வருடப் பிற்பகுதில் போதிய மழைவீழ்ச்சி இன்மையால் நீர் நிலை களில் நீர் மட்டம் தற்பொழுது வெகு வாகக் குறைந்துள்ளது. (எ-16)

## யாழ். முற்றவெளியில்

# குப்பைகளைத் தீயிட்டுக் கொளுத்திய விசமிகள்

அரியாலை,ஏப்.24

யாழ். முற்றவெளிப் பகுதியில் முனீஸ்வரன் வீதியோரமாகக் கொட் டப்பட்டிருந்த குப்பைகளை விஷமி கள் சிலர் நேற்றுமுன்தினம் காலை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

இந்தக் குப்பைகள் திடீரென நாலாபக்கமும் பற்றி எரிந்ததால் நகரப்பகுதி புகை மண்டலமாகக் காணப்பட்டது.

யாழ். மாநகர தீயணைக்கும் பிரி வினர் அந்த இடத்திற்கு விரைந்து காலையிலிருந்து மாலைவரை தீயை அணைப்பதில் மும்முரமாக ஈடுபட்டி ருந்ததைக் காணமுடிந்தது.

தீயை அணைக்காமல் விட்டிருந் தால் இந்தப் பகுதியில் இருக்கும் நடைபாதைக் கடைகளுக்கும் தீயி னால் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-17)

# அதிக விளைச்சல் பெறக்கூடிய புதிய ரக வெங்காய இனம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

அதிக விளைச்சலைப் பெற்றுத் தரககூடிய புதியரக வெங்காய இனம் ஒன்று திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினரால் உரு வாக்கப்பட்டுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டுமுதல் இதுதொடர்பான ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டு வந்தது.

கடந்தமாதம் இந்த ஆராய்ச்சி வெற்றிபெற்றது.

குடாநாட்டில் ஏற்கனவே விளை விககப்படும் கலப்பு வெங்காய இனங களில் இருந்து சிறந்த அம்சங்களைப் பிரித்தெடுத்தே புதியரக வெங்காய இனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இனம் இதுவரை விவசாய பயன்பாட்டுக்கு விடப்படவில்லை என் றும் -

யாழ்ப்பாணத்தில் உள்ள விவ சாயிகள் ஐவருக்கு வெங்காய இனம் முதற்கட்டமாக வழங்கப்பட்டு அதன் விருத்தி பற்றிச் சோதனை நடத்தப் படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த வெங்காய இனம் கூடிய பரு மனுடைய குமிழ்களைக் கொண்ட தாக இருக்கும். இவ்வினத்தை விவ சாய தாவரவிருத்தி ஆராய்ச்சி உத்தி யோகத்தர் சி.கே.அரசகேசரி மற்றும் விவசாய போதனாசிரியர் க.ஜெ..நா தன் ஆகியோர் உருவாககியுள்ளனர். (ஒ-(·)

# கைதி தப்புவதற்கு உதவிய காவலர் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் தப்புவதற்கு உதவி செய்தவர் எனக் கூறப்படும் சிறைச் சாலைக் காவலர் ஒருவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளர்.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியான கிட் டினன் நிஷாந்தன் கடந்த 8ஆம் திகதி சிறைச்சாலைச் சுற்றுமதிலால் ஏறிக்குதித்துத் தப்பியோடியிருந்தார்.

கைதி மதில் பாய்ந்து தப்பி யோடுவதற்குச் சிறைக்காவலர் ஒரு வர் உதவி செய்தார் என்று விசா ரணைகளின் மூலம் தெரியவந்ததை யடுத்து சிறைச்சாலை நிர்வாகம் அவரைப் பணியில் இருந்து இடை நிறுத்தியுள்ளது.

தப்பியோடிய கைதி 98 ஆம் ஆண்டு நெல்லியடிப் பகுதியில் இளை ஞர் ஒருவர் படுகொலை செய்யப் பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வர் எனச் சந்தேகிக்கப்படுபவராவார். (ஐ-7)



சமுகத்தில் நலிவுற்ற மக்களுக்கு உதவும் நோக்கத்திற்கு நிதி சேகரிக்க மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம் கடந்த மாத நடுப்பகுதியில் 'முத்தமிழ் சங்கமம்' என்ற நிகழ்ச்சியை யாழ். வீர சிங்கம் மண்டபத்தில் நடத்தியது. நிகழ்வில் எடுக்கப்பட்ட படங் களில் சில இவை. (ம)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவகுமார், இல.19, புலவனார் வீதி (பெற்றோல் செற்றுக்கு அருகில்), கல்வியங்காடு. (31191)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அரசடி வீதியில் கிணறு, மலசலகூடம் என்பனவற்றுடன் 2½ பரப்புக்காணியில் அமைந்த சிறு வீடும் அத்துடன், ஒரு பரப்பு வெறுங்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சதாசிவம் சிவனடியார், அரசடி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (31196)

கடந்த ஏழு மாதத்திற்குள் புதிதாக வாங்கப்பட்ட RX72 மொடல் சிசில் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சீனியர் லேன், கலட்டி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (31197)

கலர் மீன்கள், தொட்டிகள், அழகுப் பொருள்கள், பூங்கன்றுகள், சாடிகள் மற்றும் ஆபிரிக்க லவ் பேட்ஸ் குருவிகள், அல்ஷேசன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55 A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (31195)

நடுகைக்கு உகந்த நல்ல இன மரவள்ளித் தடி விற்பனைக்குண்டு. தொடர்பு: G.எட்வேட், இல.63, குருசோ வீதி, யாழ்ப்பாணம். (31181)

5 ஸ்ரீ xxxx தொடரிலக்கமுடைய மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை, 67, கண்டி வீதி, யாழ்ப்பாணம் (சோமசுந்தரம் ஒழுங்கை அருகில்). அதன் பின் T.P.: 222 5849உடன் தொடர்புகொள்ளவும். (31165)

நல்ல நிலையிலுள்ள லான்சர் கார், ரொயாட்டா கொர்லா கார், மொறிஸ் மைனர் கார் ஆகிய மூன்று கார்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.ஹரிஹரன், 54/12, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (31154)

## மணமகள் தேவை

30 வயதான, பரணி நட்சத்திரமுடைய, Into Tech. பட்டதாரி மணமகனுக்கு அதே துறையில் பட்டம் பெற்ற 25 வயதிற்குட்பட்ட மணமகளைப் பெற்றோர் விரும்புகின்றார்கள். தொடர்பு: விளம்பர இல. 2235, உதயன், யாழ்ப்பாணம். (31168)

கனடாவில் வதிவுரிமை பெற்ற யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 30 வயது, உத்தராட நட்சத்திரம் 4ஆம் பாதம், 5' 9" உயரமுடைய, நற்பண்புள்ள மணமகனுக்கு மெல்லிய, அழகிய, சிவந்த நிறமுள்ள மணமகள் தேவை. சீதனம் ஓரளவுக்கு எதிர்பார்க்கப்படும். இலங்கைக்கு வந்து திருமணம் செய்வார். தொடர்புகளுக்கு: 222 6952 (கந்தர்மடம்). (31059)

## வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களுக்கு!

வலிகாமம் தெற்கு,ஏப்.24

கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது கடமையில் ஈடுபட்ட வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள, ஆசிரியர்கள், பணியாளர்களுக்கான கடமைக்கான கொடுப்பனவுகள் வழங்குவதற்கான கோரிக்கைப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உரிய படிவங்களைப் பூரணப்படுத்தி வரவுச் சான்றிதழ்களை சமர்ப்பித்து தமது கொடுப்பனவுக் கோரிக்கைகளை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக வலிகாமம் கல்வி வலயத்தில் சேர்ப்பிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (எ-152)

## விற்பனைக்கு

கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. உயரம் 3', நீளம் 5' அகலம் 20" 2 தட்டுக்கள் கொண்டவை.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
*44, 42, பெரியகடை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(31251) (40-12-13-24)

---



# பிரம்மோற்சவம்

பருத்தித்துறை கோட்டுவாசல்
அருள்மிகு சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தான
2004 தாரண வருஷ மஹோற்சவம்

நாளை (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு கொடியேற்றம்

29.04.2004 வியா. - முத்தி உற்சவம்
30.04.2004 வெள்ளி - வசந்தோற்சவம்
01.05.2004 சனி - திருமுழுக்கு உற்சவம்
02.05.2004 ஞாயிறு - திருவேட்டை உற்சவம்
03.05.2004 திங்கள் - ரத உற்சவம் காலை 9.00 மணி
04.05.2004 செவ். - தீர்த்த உற்சவம்
கடல் தீர்த்தம் காலை 7 மணி

பிரதிஷ்டா பிரதம குரு:
பிரம்மஸ்ரீ **தாணு.வாசுதேவ சிவாச்சாரியார்**
(சபரீசதாஸன் - சிவாகம வித்தியாசாகரன்)
ஆலய நித்திய குரு:
பிரம்மஸ்ரீ **இ.சுந்தரேஸ்வர சர்மா** (அளவெட்டி)

முகாமையாளர்
...மூர்த்தி.

நிர்வாகிகள்:
வி.இராமச்சந்திரன்,
சி.தீபானந்.

(31199)(34-13-12-24)

---

# கொக்குவில் இந்து அன்னையின் மைந்தர்களுக்கு அன்பான வேண்டுகோள்!



எமது கல்லூரியின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அமரராகிவிட்ட **சி.கே.கந்தசாமி** அவர்களின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் 24.04.2004 சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதனை நினைவுறுத்தி கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரங்கல் கூட்டத்தில் கலந்து தங்களின் அஞ்சலியைச் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

இடம்: யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
(ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த சிறுவர் நூலகம்)
காலம்: இன்று (24.04.2004) சனிக்கிழமை பி.ப. 4.30

பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-34621) (24-13-12)

---

# இலவச ஆங்கில வகுப்பு

ஒரு மணிநேரத்தில் ஆங்கிலத்தில் கதைக்கலாம்

| | |
|---|---|
| ※ மாணவர்கள் | ※ பெற்றோர் |
| ※ இளைஞர், யுவதிகள், வீட்டுப்பெண்கள் | ※ கணனி மாணவர்கள் |
| ※ உயர்கல்வி மாணவர்கள் | ※ IELTS மாணவர்கள் |
| ※ பல்கலைக்கழக மாணவர்கள் | ※ பட்டதாரிகள் |
| ※ ஆசிரியர்கள் | ※ அலுவலர்கள் |

அனைவருக்குமான புதிய முறையிலான ஆங்கில வகுப்பு

இடம்: யாழ். மத்திய கல்லூரி
காலம்: இன்று (24.04.2004) சனிக்கிழமை
வகுப்புகள்: ஏதாவதொன்றில் கலந்துகொள்ளலாம்

| | |
|---|---|
| காலை 8.30 - 9.30 | காலை 9.30 - 10.30 |
| காலை 10.30 - 11.30 | மாலை 1.30 - 2.30 |
| மாலை 2.30 - 3.30 | மாலை 3.30 - 4.30 |
| மாலை 4.30 - 5.30 | மாலை 5.30 - 6.30 |

அனுமதி இலவசம் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் கலந்துகொண்டோருக்கான சான்றிதழும் இலவசம்.

**PSALM INSTITUTE OF ENGINEERING AND TECHNOLOGY**
22-1/4, Galle Rd., Dehiwela. 011-555 9222.

(34-13-12-24) (C/34619)

---

# நூல் வெளியீடு

'கல்வியில் முன்னேற' [உளவியல் நூல்]

இடம்: யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்

காலம்: **இன்று (24.04.2004) மாலை 4.00 மணி**

திருமதி பி.எவ்.சின்னத்துரை (அதிபர், யா/ புனித சாள்ஸ் ம.வி.) அவர்களின் "கல்வியில் முன்னேற" உளவியல் நூல் வெளியீடு அருட்தந்தை சூ.டேமியன் அ.ம.தி. அடிகள் தலைமையில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'நான்' பப்ளிக்கேஷன்ஸ்
திருமதி பி.எவ்.சின்னத்துரை
அதிபர், யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

(12-13-24) (சி-31198)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமாலட்சுமி அன்னலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, மங்கையர்க்கரசி வித்தியாசாலை, நல்லூர்)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வாழ்ந்தவருமான திருமதி பூமாலட்சுமி அன்னலிங்கம் அவர்கள் 20.04.2004 செவ்வாய்க்கிழமையன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எஸ்.எஸ்.அன்னலிங்கம் (பிரபல வர்த்தகர், மாத்தளை, கண்டி, ரத்தோட்டை) அவர்களின் அன்பு மனைவியும் சிறீகாந்தா (கனடா), சிறீசாந்தி (லண்டன்), வைத்திய அதிகாரி சிறீதேவி அசோகன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தி (கனடா), ரகுநாதன் (லண்டன்), அசோகன் (கொழும்பு) ஆகியோரின் அருமை மாமியாரும் ஜனனி, மயூரன், விதுரன், யாழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் (இணுவில்), அருணாசலம் (சுதுமலை), பேராயிரவர் (முன்னாள் அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) (சுதுமலை) மற்றும் இராமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை மதியம் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிலாகிரிய அவெனியூ,*
*கொழும்பு - 4,*
*T.P.: 2595860*

(31194)(42-13-12-24)

தகவல்:
ந.அசோகன்.

## திருமதி சுப்பிரமணியம் ஆச்சிமுத்து



அச்சுவேலி, கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் பருத்தித்துறையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் ஆச்சிமுத்து 22.04.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லாச்சியின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நாகம்மா, மனோன்மணி ஆகியோரின் சகோதரியும், சிவராசா (லக்கி கவுஸ் உரிமையாளர்), ஆனந்தராசா, புஸ்பராணி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் நந்தகுமாரி, ஜெயந்தி, காலஞ்சென்ற புஸ்பராசா ஆகியோரின் மாமியாரும் உஷானி, தாரணி, துளசி, ருஷாந்தினி, கலாபன், ரகுராமன். அபிராமன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோவில் வீதி,*
*நா.மு.தெரு. சந்தி, பருத்தித்துறை.* (31200)(42-13-12-24)

தகவல்:
சு.ஆனந்தராசா.

## கணபதிப்பிள்ளை சதாசிவம்

K.S.Associates (Charted Accountants) 140, Front Street, Colombo - 11 இல் உள்ள கணக்காய்வு நிறுவன உரிமையாளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளரும் (FCA) யாழ்ப்பாணம், வடமராட்சி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் இல. 1/4, B4 Farm Road, Mattakkuliya, Colombo - 15 (Kathiranawatta Housing Scheme)ஐ வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சதாசிவம் 22.04.2004 வியாழக்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் திருமதி யோகேஸ்வரியின் (Teacher, Colombo Kollupitty St. Thomas (Prop) College) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (24.04.2004) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

T.P.: 2521615 (சி-34620) (24-13-12)

தகவல்: யோ.சதாசிவம்
(மனைவி).

---




பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கடற்கரையோரப் பகுதி மக்கள் மத்தியில் வறுமையுடன் கூடிய சமூகப் பிரச்சினைகள்

## கருத்தரங்கில் பேராசிரியர் தந்த தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். குடாநாட்டின் கடற்கரையோரக் கிராம மக்கள் மத்தியில் வறுமையுடன் கூடிய சமூகப் பிரச்சினைகள் மலிந்து காணப்படுகின்றன.

- இவ்வாறு யாழ். பல்கலைக் கழகப் புவியியற்றுறைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சமாதானம் மற்றும் சகவாழ்வுக்கான வடக்கு - தெற்கு மக்களின் கருத்துப் பரிமாற்றம் என்ற அமைப்பின் அனுசரணையுடன் யாழ். நீருயிர் வள ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் நல்லூர் ஸ்தான சி.சி.வித்தியாலயத்தில் கடந்த 18 ஆம் திகதி கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

மீன்பிடியில் ஈடுபட்டுள்ள சமூகம் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளது. யாழ். குடாநாட்டுக் கரையோர கிராம மக்கள் இதற்கு உதாரணமாகக் காணப்படுகின்றனர். கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தி அடையாமல் இருப்பதற்கு இடநெருக்கடி முக்கிய காரணமாக உள்ளது. கடற்கரைப் பிரதேசங்களில் குடியிருப்புக்கள் அமைக்கும் போது இடவமைவு, நிலம், குடிதண்ணீர் எனப் பல பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

கடற்கரை ஓரங்களில் குடியமர்த்தப்படும் மக்களின் குடிதண்ணீர் உட்பட சகல பிரச்சினைகளும் கருத்திற்கொள்ளப்படவேண்டும். அத்துடன், கடற்கரை ஓரங்களில் குடியிருப்புக்கள் அடர்த்தியாக இருப்பதனால் சூழலைப் பேணமுடியாத நிலையுள்ளது. இவற்றைக் கருத்திற் கொண்டு மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படல் வேண்டும். கிராமிய கடல்சார் பொருளாதாரத்தைப் பேண வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

கடற்றொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பொதுவாகப் பிரச்சினைகளாகக் கடன், வறுமை என்பன பொருளாதார மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ளன. இந்தநிலையில், கடற்கரைக் கிராமங்களின் சமூகப் பிரச்சினைகள் வறுமையுடன் கூடிய நிலையில் மலிந்து காணப்படுகின்றன.

இளவயதில் திருமணம் செய்தல், குடும்ப வாழ்வில் குழந்தைகளைக் கூடுதலாகப் பெற்று எடுத்தல், குடும்பத் தலைவன் மதுவுக்கு அடிமையாதல் எனப் பல பிரச்சினைகள் உள்ளன.

கடற்கரையோரக் கிராமங்களில் மலசலகூட வசதிகள்கூடக் காணப்படுவதில்லை. இது சுகாதார ரீதியான பெரும் பிரச்சினையாக உள்ளது.

மீன்பிடித் தொழிலை மட்டும் நம்பியிராமல் கடற்றொழிலாளர்கள் நகர வர்த்தகத் தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். அதேவேளை, கடற்கரையோரக் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் - என்று பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்ததாவது:-

பிரதேச வளங்கள் தொடர்பாக நாம் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். பிரதேச வளங்கள் தொடர்பாக நாங்கள் அக்கறை செலுத்தாமல் இருப்பது பெரும் குறையாகக் காணப்படுகிறது. வளங்களை நாங்கள் இனங்காண்பது இல்லை. அவற்றைப் பயன்படுத்துவதில்லை. அபிவிருத்திக்கு வளங்களை இனங்கண்டு பயன்படுத்துவது முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் வளம் குறைந்தவை. பயிர் உற்பத்திக்கு முக்கியமானவை. இப்போது பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளன.

வளங்களைப் பயன்படுத்த மனிதனுக்குத் தொழில்நுட்ப அறிவு வேண்டும். விவசாய அபிவிருத்திக்கு நிலப்பிரச்சினை அதிகரித்து பயிர்ச்செய்கைப் பரப்பினைத் தொழில்நுட்ப ரீதியாக மேற்கொள்ளவேண்டும். தொழில்நுட்ப அறிவு என்பது சகலருக்கும் அவசியமானதாகும். அப்போது தான் அபிவிருத்திப் பணிகள் முக்கிய நிலையை அடையும் - என்று தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன தெரிவித்ததாவது:-

கடல்நீர் வளத்தினை யாழ். குடாநாட்டில் பேணவேண்டியுள்ளது. அப்போதுதான் மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படமுடியும். உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக இராணுவப் பிடியில் 81 கி.மீ. தூரக் கடற்பிரதேசம் உள்ளது. முக்கிய மீன் பிடிக் கிராமங்கள் செயலிழந்து போயுள்ளன. மீன்பிடிப்பிரதேசங்கள், முட்கம்பி வேலிகள், இராணுவ காவலரண்கள நிறைந்த பகுதிகளாகவுள்ளன.

மீனவர்கள் மீன்படியில் ஈடுபட நேரக்கட்டுப்பாடு, அடையாள அட்டைகள் எனப் பல நெருக்கடிகள் உள்ளன. இரவுகளில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் உடனடியாக கரைக்குத் திரும்ப முடியாதநிலை காணப்படுகிறது. கடற்றொழிலுக்கு ஆண்கள் செல்வதனால் தனித்து வீட்டில் இருக்கும் பெண்கள் அச்சுறுத்தல்கள், தொலலைகள் என்பவற்றிற்கு உட்படுகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய மீனவர்கள் குடாநாட்டு கடற் பரப்புக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடல், மீனவர்களின் படகுகள், உபகரணங்களைச் சேதப்படுத்தல், தாக்குதல்களில் ஈடுபடுதல் என சர்வதேச கடறசட்டங்களை மீறி இந்திய மீனவர்கள் செயற்படுகின்றனர். இவை எல்லாம் இலங்கை, இந்திய கடல் ஒப்பந்தங்களையும் சட்டங்களையும் மீறுபவையாகவுள்ளன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு இந்திய, இலங்கை கடற்படைகள் துணைநிற்கின்றன. அந்தத் துணிவின் செயற்பாடுகளாக இந்திய மீனவர்கள் பல அத்துமீறல்களை யாழ் குடாக் கடற்பரப்பில் மேற்கொள்கின்றனர். இரண்டு லட்சம் கடற்றொழிலாளர்கள் யாழ். குடாக் கடற்பரப்பினை நம்பியுள்ள நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் பெரும் பாதிப்பை குடாநாட்டு மீனவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

யாழ். மாநகரசபை சூழல் அதிகாரசபை அதிகாரி என்.சூரியராஜா தனது உரையில் கூறியதாவது:-

எமது சூழலை நாம் பாதுகாக்க வேண்டும் சூழலைப் பாதுகாக்கும் போதுதான் ஆரோக்கியமான மனித குலத்தை உருவாக்கமுடியும். சூழலைக் குழப்ப மனிதனால் முடியுமென்றால் அதனைப் பாதுகாக்கும் சக்தியும் மனிதனுக்கு உண்டு. தற்போது குடாநாட்டில் சூழல் மாசடைதல் தன்மைகள் கூடுதலாக உள்ளன. சூழல் தொடர்பான அக்கறைகள் மக்கள் மத்தியில் அருகி வருகிறது எனவும் தெரிவித்தார். (ஐ-12)

## மத்தியஸ்தர் சங்கக் கூட்டம்

வலி.வடக்கு,ஏப்.24

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு எம்.வேதாபரணம் தலைமையில் யாழ்ப்பாணம இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-86)

## உடுவில் கோட்ட அதிபர் கூட்டம்

வலி. தெற்கு,ஏப்.24

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுவில் கலவிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறும்.(எ-152)

## காச நோயாளர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.24

இலங்கையில் காசரோக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே உள்ள நோயாளிகளுடன் வருடமொன்றிற்கு 8ஆயிரம் பேருக்குப் புதிதாக இந்நோய் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைகளில் புதிய நோயாளிகளுக்கு 6மாதங்கள் நீடிக்கும் சிகிச்சையும், ஏற்கனவே இந்நோயுள்ளவர்களுக்கு 8மாதகால சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

இருந்தபோதும், இவ்வாறான சிகிச்சை முறைகளை நோயாளிகள் தொடர்ந்து மேற்கொள்வதில்லை

உலக நாடுகளில் 80 லட்சம் பேருக்குப் புதிதாக இந்நோய் ஏற்படும் அதேசமயத்தில், 30 லட்சம் நோயாளிகள் இறக்கின்றனர்.

80 சதவீதமான மரணங்கள் அபிவிருத்தி அடையும் நாடுகளில் இடம்பெறுவதாகச் சமீபத்தில் வெளியான சுகாதார அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும் கூறப்பட்டது. (8-ரி)

## கொழும்பில் இன்றும், நாளையும் சைவசமய எழுச்சிப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.24

சைவ நீதி நடத்தும் சைவ எழுச்சிப பெருவிழா இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் லோறன்ஸ் றோட், கொழும்பு - 04 இல் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் அமர்வு இன்று மாலை 4.30 மணிக்கு இடபக்கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். தலைமையுரையை ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலய அறங்காவலர் டி.எம். சுவாமிநாதன் நிகழ்த்துவார். வாழ்த்துரையை காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன சுவாமிகள் திருவம்பலதேசிக ஞானப்பிரகாச பரமாச்சார்ய சுவாமிகள் வழங்குவார். சைவ நீதி நிறுவுநர் நினைவுரையை தமிழருவி த.சிவகுமாரும், வைச நீதி எட்டாவது ஆண்டு மலரின் வெளியீட்டுரையை வீரகேசரி செய்தி ஆசிரியர் ஆர்.பிரபாகரனும் நிகழ்த்துவர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகளின் காலை அமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மயூராபதி பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர் பொன். வல்லிபுரம் தலைமையில் நடைபெறும். தொடர்ந்து 'விடை தேடும் வினாக்கள்' என்னும் சிறப்பு நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில் சைவசமயம் குறித்த சபையோரின் வினாக்களுக்குச் சைவ அறிஞர்கள் பதில் அளிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாலை அமர்வுகள் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் தலைவா சித்தாந்த பண்டிதர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறும். பட்டிமண்டபம், சொற்பொழிவு, ஆய்வுக்கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கல் என்பன விசேட நிகழ்வுகளாக இடம்பெறும்.

இருநாள் நிகழ்வுகளிலும் திருமுறை இசைவிருந்தினை தேவார இசைமணி கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் வழங்குவார். (எ)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரையின் 'கல்வியில் முன்னேற' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4மணிக்கு அருட்தந்தை கூ.டேமியன் தலைமையில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10)

## சனசமூக நிலைய விளையாட்டு விழா

கைதடி,ஏப்.24

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத் தலைவர் சு.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் கலந்துகொள்வார்.

இன்றைய நிகழ்வில் கைதடி மற்றும் நாவற்குழி சனசமூக நிலையங்களுக்கிடையேயான அஞ்சல் ஓட்ட நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இப்போட்டி கடந்த புதன்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டமை தெரிந்ததே. (எ-75)

## சிறப்புற நடைபெற்ற கொடிஏழல் வெளியீட்டுவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தமிழ் மாணவர் ஒன்றியம் நடத்தும் வறிய மாணவர் கல்வி மேம்பாட்டு நிதியத்திற்கான கொடிஏழல் ஆரம்ப விழா நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக ஈகச்சுடரினை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தலைமையுரையினையும் வெளியீட்டுரையினையும் யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியர் நாக. தமிழிந்திரன் நிகழ்த்தினார். 'கொடி ஏழல்' சின்னத்தினை யாழ். கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட்டு வைக்க தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத்தின் செயலாளர் இரா. அருட்செல்வம் பெற்றுக்கொண்டார்.

இதில் முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி, பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் கு.சதாசிவமூர்த்தி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணிப்பாளர் சு.ஜெயராஜ், யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் க.இராசதுரை மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர்.

இதேவேளை, இந்தக் 'கொடி ஏழல்' ஆரம்ப நிகழ்வு நேற்று வடமராட்சி வலயத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், தென்மராட்சி வலயத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடை பெற்றது. (எ-ரி)

## நூல் வரிசை



**நூல்:** கைக்குள் சிக்காத காற்று

**ஆசிரியர்:** த.ஜெயசீலன்

**வெளியீடு:** அருணன் பதிப்பகம், நல்லூர்.

இலக்கிய வகைகளிலே மிகப் பழைமையானதும் அதேசமயத்தில் மிகப் புதுமையானதும் கவிதையே என்பதை யாவரும் ஏற்பர். வீச்சும் விறலும் வேகமும் தாக்கமும் நிறைந்த கவிதைகள் பெரும் எண்ணிக்கையில் இன்று வெளியாகிவருவது மகிழ்ச்சிதரும் செய்தியாகும். மரபுக் கவிதையின் எண்ணிக்கை குறைந்தும் புதுக்கவிதையின் தொகை கூடியும் வரும் ஒரு காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த நிலை வரவேற்கத்தக்கதா என்ற வினா ஒரு புறமுமாக, இவ்விரு வடிவங்களையும் கையாளுந்திறமை பெற்ற கவிஞர் சிலராவது எம்மிடையே உள்ளனர் என்பது நிச்சயம் ஆறுதல் தருவதுதான். இந்தச் சிலரின் வரிசையிலே குறிப்பிடத்தக்க ஒருவராக இளங்கவிஞர் த.ஜெயசீலனும் இடம்பெறுகிறார். அவரின் முதலாவது கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து 'கைகளுக்குள் சிக்காத காற்று' என்ற இரண்டாவது கவிதைத் தொகுதி அண்மையில் வெளியாகியுள்ளது.

'நமக்குத் தொழில் கவிதை
என்றான் தீக்கவிஞன்
எனக்குத் தொழிலல்ல... எனக்கு அது உயிராம்' என்று கவிதையின் படைப்பிலேயே உயிர்க்க விளையும் ஜெயசீலன், அது தன்னுள் 'நிரந்தரியாய்' நின்றிட வரம் வேண்டும் என வேண்டி நிற்பது அவரின் உணர்வு பூர்வமான பக்தி நிலைப்பாட்டைப் புலப்படுத்துவது குறிப்பிட்டுக் கூற வேண்டுவதாகும்.

- இவ்வாறு தாம் வேண்டிய வரத்தில் தமக்குக் கிடைத்தது, 'கவிதையெனும் அண்டத்தின் சிந்துகளே' என்கையில் அவரின் தன்னடக்கமும் புலப்படத் தவறவில்லை. 'தன்னைத் தாழ்த்துபவன் என்றோ ஓர்நாள் உயர்த்தப்படுவான்' என்ற கூற்று ஜெயசீலனைப் பொறுத்தவரை நிறைவேறியே தீரும் என்ற நம்பிக்கை அவரின் இந்தக் கவிதைத் தொகுதியிலும் பல இடங்களிலே புலப்படக் காண்கின்றோம். எல்லாமாகச் சிறியனவும் பெரியனவுமான எழுபத்தேழு கவிதைகள் இந்நூலிலே இடம்பெற்றுள்ளன.

இவர்தம் கவிதையின் எல்லையும் பரப்பும் மிக விசாலமானவை. பலவற்றையும் தொட்டும் தடவியும் தாக்கியும் தணிந்தும் சில வேளைகளில் அமைதியோடு நகரும் சிற்றாறாகவும் சிலவேளைகளிலே கரையையெல்லாம் அடித்துப் பாயும் காட்டாறாகவும் அவை விளங்குகின்றன. மனிதத்தின் பல்வேறு உணர்ச்சிகளைத் தடம்கண்டு புலப்படுத்தும் ஆற்றல் விகசிக்கின்ற இடங்களும் நெஞ்சைத் தொடுவனவாயுள்ளன.

கற்பனையின் வேகத்தில் எழுகின்ற உவமானங்களும் ஜெயசீலனுக்குக் கைவந்த கலை என்பதற்கு 'கோயிலடி வீதி (நல்லூர்) ஏதோ பரவசத்தை எமக்கூட்டும் 'அன்னை மடி', 'வேம்பின் கீழ் அமர்ந்து மணலெண்ணும் பொன் முற்றம்', 'எழில் பூக்கும் அருள் விருட்சம்' என்பன தொட்டுக்காட்ட வேண்டிய அழகுகள்.

அந்தி சரிய அசைந்துவரும் இராகவிய
அந்தரங்கள் அற்று ஆறவரும் நண்பருடன் நேரம் நகர்வதனை நினையாமற் கதையளக்கும் நிம்மதிப் பூங்கா... என்ற அடிகளிலே எதார்த்தத்தோடு இராகவிய, நிம்மதிப் பூங்கா ஆகிய சொல்லாட்சிப் புதுமைகளும் இரசிக உணர்வுக்கு நல்ல விருந்துகள்.

வீட்டுக்குள் வந்துவிடுகின்ற அநாதை நாய்களையும் பூனைகளையும் ஓட்டிக் கலைக்கின்ற முதுமை பற்றிய எண்ணம் தனக்குள்ளே எழுகையில் அவை சில கணங்கள் தன்னை வதைக்கையில் முதியவன் ஒருவன் அடையும் வேதனை, வெப்பிசாரங்கள் கவிஞரின் படிமப் படைப்புக்கு எடுத்துக்காட்டுக்களாகப் 'பழி' என்ற கவிதையில் இடம்பெறுவதும் சிந்தனையைத் தூண்டுவதாய் உள்ளது.

நூற்றுப் பத்துப் பக்கங்களில் அழகிய முகப்புச் சித்திரத்தோடு கூடி அட்சரம் நூறு பெரும் கவிதைகளை உள்ளடக்கி விளங்கும், 'கைகளுக்குள் சிக்காத காற்று' மெல்லிய தென்றலாய் வாசகரிடையே வீசி அவர்களின் நெஞ்சங்களைத் தடவி மகிழ்வூட்டும் என்பதற்கு ஐயமில்லை.

- க.சொக்கன்.

## சாவகச்சேரி நுணாவில் சர்வ சாதன சங்க சனசமூக நிலையம்

### வருடாந்த பொதுக் கூட்டம்

இடம்: சங்க மண்டபம்.

காலம்: 25.04.2004 ஞாயிறு பி.ப. 5.00 மணி

அங்கத்தவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/34634)(40-11-16-18) செயலாளர்.

---

உ

## கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு

ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் (காளி கோயில்) கோயிலுக்கு ஆகம முறைப்படி வசந்தமண்டபம் கட்டுவதற்கான ஒப்பந்தகாரர்

### தேவை

மேற்படி எமது ஆலய வசந்த மண்டபத்தை முறைப்படி அமைப்பதற்கு ஒப்பந்தகாரர் தேவை. விண்ணப்பிப்பவர் ஏற்கனவே கோயில் வசந்த மண்டபங்கள் கட்டியதற்கான சான்றுகளுடன் முழுச் செலவு விவரத்தையும் கொண்ட பட்டியலைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். விரும்புவோர் எதிர்வரும் 30.04.2004இற்கு முன் காலை 7 மணிமுதல் 9.30 மணிக்குள் ஆலய காரியாலயத்தில் நேரில் தொடர்புகொள்ளவும்.

(31256) (24-11-16-18) - ஆலய பரி[illegible]ன சபையினர்.

---

## இனுவில் பொதுநூலகம் ச[illegible] நிலையம் இனுவில் லயன்ஸ் கழகத்தின் அனு[illegible]யுடன் நடத்தும் க.பொ.த. உயர்தர மாண[illegible]ளுக்கான

### வழிகாட்டல் கருத்தரங்கு

இடம்:- இனுவில் பொதுநூலக கலாசார மண்டபம்

நேரம்:- காலை 9 மணி

வழங்குபவர்கள்:- 25-04-2004 (ஞாயிறு) இணைந்த கணிதம் - திரு.சற்குணராஜா (யாழ்.பல்கலைக்கழகம்)

பௌதிகவியல:-திரு.குமரன(B.Sc.)

26-04-2004 (திங்கள்) கணக்கீடு:- திரு.பாலவாசன்(B.B.A.(Fm.Spl.)

★ குறிப்பேடுகள் வழங்கப்படும்.

திரு.க. தேவராஜா (வணிகத்துறைத்தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்), கலாநிதி திரு. சற்குணராஜா ( சிரேஷ்ட விரிவுரையாளர்) ஆகியோரால் புள்ளிவழங்கும் போது கவனிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக கருத்து வழங்கப்படும்.

இனுவில் பொது நூலகம்,
ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் கோயிலடி, இனுவில். (C/34626)(43)

---

## பாலர் பள்ளி

(Tamil Learning Software)

### கணனி மென்பொருள்

### = அறிமுக விழா =

இடம்: மானிப்பாய் பிரதேச சபை மண்டபம்

காலம்: நாளை (25.04.2004) ஞாயிறு மாலை 3.00 மணி (பு.நே.)

தலைமை: திரு.S.பரமேஸ்வரன் (ஆசிரியர்)

கணனி மென்பொருள் வடிவமைப்பு:
திரு.S.செல்வதாஷன் (மேதர்ஸ் வீதி, மானிப்பாய்)

பிரதம விருந்தினர்:
திரு.து.வைத்திலிங்கம்
(சிரேஷ்ட உதவிச் செயலாளர், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு அலுவலகம், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.K.விக்னேஷ் (இயக்குநர், IIS)
திரு.S.மாதவகுமார்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - வலிகாம வலயம்)
திரு.K.ஜெகநாதன்
(அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)
திரு.K.நந்தகுமார்
(பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பப் பூங்கா)

(31259) (24)

---

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தவராஜா

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தவராஜா அவர்கள் நேற்று(23.04.2004) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சேதுப்பிள்ளை தம்பதியின் சிரேஷ்ட புத்திரனும் தவமணிதேவி (செல்வமலர்) அவர்களின் பாசமிகு கணவரும் பிரபாவதி (லண்டன்), கருணாவதி (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்), தணிகைவாசன் (லண்டன்), காண்டீபன் (லண்டன்), புனிதவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சிவானந்தம், கமலாவதி ஆகியோரின் அருமைச் சகோதரரும் துரையப்பா, கந்தையா, செல்வரத்தினம், கமலாதேவி, செல்வபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கண்மணியின் உடன் பிறவாச் சகோதரருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும (26.04.2004) திங்கட் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*

தகவல்: ஆ.சிவானந்தம். (சகோதரன்)

(C/34629)(38-11-16-18)

---

## நல்லூர் பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிட்ட இலக்கங்களைக் கொண்ட கடைகள் 2004ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் 10.05.2004ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பி.ப. 2.00 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *"செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி"* என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், கடையின்இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் குறிப்பிட்ட மீளளிக்கமுடியாத படிவக்கட்டணமும், மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமும் செலுத்துவதன் பேரில் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 07.05.2004ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் மூன்று நாள்களுக்குள் கிரயத் தொகை (Key Money), வற்வரி (Vat) என்பனவற்றின் முழுத்தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**குறிப்பு:**

01. கேள்விப்பத்திரத் தொகையுடன் 15% வற்வரி செலுத்தப்படல் வேண்டும்.
02. ஒரு விண்ணப்பப் படிவதில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.
03. தங்களினால் கோரப்படும் கேள்வித் தொகைக்கு மேலதிகமாகத் தொகையின் 15% வற்வரி செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படல்வேண்டும்.
04. குறிப்பிடப்பட்ட கடைகளுக்குரிய ஆகக்குறைந்த கேள்வித்தொகைக்குக் கீழ் குறிப்பிடப்படும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
05. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விப் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கிரயத் தொகை (வற் தவிர்ந்த) |
|---|---|---|---|
| 04 | 500/- | 10000/- | 108000/- |
| 06 | 500/- | 10000/- | 108000/- |
| 07 | 500/- | 10000/ | 157500/- |
| 10 | 500/- | 10000/ | 144000/- |
| 14 | 500/- | 10000/- | 126000/- |

22.04.2004

பொன்னையா வைரமுத்து,
செயலாளர், நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.


(சி-34631) (24-11-16-18)

---


abe

## Association of Business Executives – UK

Continue your studies in 72 universities in 13 countries Including UK, USA, Australia, Canada, New Zealand etc.



**Planning for Career Development**




Certificate Course & Diploma Course in :

**Business Administration** (Part-Time/FullTime)

**Business Information Systems** (Part-Time/FullTime)

*New batch commencing on 28th April 2004*

**IELTS**
**SPOKEN ENGLISH**
Conducted by British qualified, experienced lecturers in English

Contact Academic Advisors:
**UniVentures Institute of Business Management**
Address: 16, Kandappah Segaram Road, Jaffna
Tel: 021 2227666 Web: www.abeuk.com

(C/34624)

# பொதுச் சுகாதாரத்தைப் பேண உதவுங்கள்! பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டாதீர்!!

## வலி. தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் வேண்டுகோள்

வலி.தெற்கு,ஏப்.24

வலி. தெற்குப் பிரதேசத்தின் பொதுச் சுகாதாரத்தைப் பேணும் வகையில் பொது இடங்களிலும் வீதியோரங்களிலும் குப்பை கொட்ட வேண்டாம் எனப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் சம்பந்தப்பட்ட பகுதி மக்களைக் கோரியுள்ளார்.

இது குறித்துப் பிரதேச சபையின் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

பொதுமக்கள் கண்ட இடங்களில் எல்லாம் குப்பைகளையும் கழிவுப் பொருள்களையும் வீசுவதால் பிரதேசத்தின் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, நாம் பிரதேசத்தைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கவேண்டும்.

வெற்றுக்காணிகளிலும், தெருவோரங்களிலும் குப்பைகளையும் கழிவுகளையும் கொட்டும் வழக்கம் பொதுமக்களிடம் குடிபுகுந்துள்ளது. பிரதேசத்தின் பல இடங்களிலும் இதுபோன்ற செயற்பாடுகளைக் காணக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக, இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு அருகில் அமைந்துள்ள பகுதி, உடுவில் உப அலுவலகத்துக்கு அருகில் இணுவில் நோக்கிச் செல்லும் சிங்கத்தின் கலட்டி வீதி, உடுவில் கற்பொக்கணைப் பிரதேசம் போன்ற இடங்களில் தெருவோரங்களில் மூட்டைமூட்டையாகக் கழிவுப்பொருள்களும் குப்பைகளும் காட்சியளிக்கின்றன.


உடைந்த போத்தல்கள், தகரப் பேணிகள், இருமபு வகைகள், வாழை மரக் கழிவுகள், சிகை அலங்கரிப்பு நிலையங்களில் சேரும் கழிவுகள், பழம் உடுபுடைவைகள் எனப் பல்வேறு கழிவுப் பொருள்களும் கோழி, ஆடு போன்றவற்றின் எச்சங்களும் இவ்வாறு வீசப்படுகின்றன.

எதிர்வரும் மாதத்தில் இருந்து இவ்வாறு குப்பைகளைக் கண்ட இடங்களில் எல்லாம் வீசுவோர் மீது நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் குப்பைகள் கொட்டப்படும் தனியாருக்குச் சொந்தமான காணியின் உரிமையாளர்கள் தமது காணியைப் பாதுகாக்கவோ, குப்பைகள் கொட்டுவதைத் தடுக்காது போனாலோ காணி உரிமையாளர் மீதும் அதற்குரிய பதில் நடவடிக்கையினைப் பிரதேச சபை மேற்கொள்ளும்.

சுற்றாடல் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பாதுகாப்பற்ற இடங்களில் தொழில் சம்பந்தமான உரிமப் பத்திரம் வழங்குவதும் முடியாது போய்விடும். சுற்றுச் சூழல் பாதுகாப்பாக இருக்கும் பிரதேசங்களிலேயே தொழிற்சாலைகள் இயங்க அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் - என்று அதில் உள்ளது.

(எ-152)



தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினரின் அனுசரணையுடன் சாவகச்சேரியில் நடத்தப்பட்ட - தையல் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டோரினால் தயாரிக்கப்பட்ட - பொருள்களின் கண்காட்சியினை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் திறந்து வைப்பதையும் - தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை பிரதேச செயலரும் ஏனைய அதிகாரிகளும் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

*(படம்: தென்மராட்சி செய்தியாளர்)*

# அருட்சகோதரர் 9பேர் குருக்களாக நியமனம்

கொழும்புத்துறை,ஏப்.24

யாழ். மறை மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான குருத்துவ திருநிலைப்படுத்தும் சடங்கில் 9 அருட்சகோதரர்கள் குருக்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் 7அருட் சகோதரர்கள் திருநிலைப்படுத்தப்படுவர். இருவர் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசெப் ஆண்டகையால் கடந்த 14 ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டனர்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்களான தி.நிகால் ஜிம்பிறவுண் (புதுக்குடியிருப்பு), அ.பி. திருமகன் (பருத்தித்துறை), தே.செல்வரட்ணம் (குடத்தனை), யே.அன்ரன் அருள்தாஸன் (கொழும்புத்துறை), பெற்றூஸ்தயாபரன் (மண்டைதீவு) ஆகியோரும் -

அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த றஞ்சித் ரூஸ்வோல்ட் (முருங்கன்), கொட்விறி ஜோயல் (புலோலி), யூட்பேணாட் (அலம்பில்) ஆகியோரும் -

திருவுளச் சபையைச் சேர்ந்த செ.அன்ரனியோசப் (வெற்றிலைக் கேணி) என்பவரும் புதிய குருக்களாக குருநிலை பெறுகின்றனர். (ஒ-30)

# குடாநாட்டில் 77 நலன்புரி நிலையங்களில் இரண்டாயிரத்து 370 குடும்பங்கள் தரிப்பு

## செயலகப் புள்ளிவிவரங்களில் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.24

குடாநாட்டில் உள்ள 77 நலன்புரி நிலையங்களில் இரண்டாயிரத்து 370 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 289 பேர்கள் வசித்து வருகின்றனர் என்று பதிவுகள் தெரிவிக்கின்றன.

உயர்பாதுகாப்பு வலயத்தில் தமது வசிப்பிடங்களைக் கொண்டுள்ள குடும்பங்களே தொடர்ந்தும் இவ்வாறு வசித்து வருகின்றன.

இதன்படி நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 3 நலன்புரி நிலையங்களில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 80பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 15 நலன்புரி நிலையங்களில் 208 குடும்பங்களைச் சேர்ந்த 817 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 17 நலன்புரி நிலையங்களில் 457 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 838 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 11 நலன்புரி நிலையங்களில் 350 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 259 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 5 நலன்புரி நிலையங்களில் 240 குடும்பங்களைச் சேர்ந்த 882 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 4 நலன்புரி நிலையங்களில் 198 குடும்பங்களைச் சேர்ந்த 858 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒரேயொரு நலன்புரி நிலையத்தில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 54பேரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 15 நலன்புரி நிலையங்களில் 777 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 108பேரும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 6 நலன்புரி நிலையங்களில் 104 குடும்பங்களைச் சேர்ந்த 393 பேரும் வசித்து வருகின்றனர்.

(ஐ-6-10)

# ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பவிருந்த தொல்பொருள்கள் சிக்கின!

கொழும்பு,ஏப்.24

கடந்த அரசின்கீழ் இயங்கிய மூன்றாம் நிலைக் கல்வியமைச்சின் ஆலோசகராகக் கடமையாற்றிய வெளிநாட்டுப் பேராசிரியர் ஒருவரால் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பபடவிருந்த ஒரு தொகுதித் தொல்பொருள்கள் சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன - என்று 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

'பிராக்மி' எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள இப்பொருள்கள் தொல்பொருள்கள் எனக் கருதப்படமுடியாதவை என தொல்பொருள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோயில் அல்லது விகாரையில் காணப்படும் கலை நுணுக்க வேலைப்பாடு அமைந்த கற்தூண்கள், மட்பாத்திரங்கள், செப்புப் பாத்திரங்கள் என்பன இப்பொருள் தொகுதியில் அடங்கியுள்ளன.

இப்பொருள்களின் புகைப்படங்களைப் பரிசீலித்த யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியா புஸ்பரட்ணம், இவை 17ஆம் மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் வடபகுதி மற்றும் தென்பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மற்றும் சிங்கள மக்களால் பயன்படுத்தப்பட்ட பிராக்மி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள பொருள்களென உறுதிப்படுத்தியுள்ளனர். இது குறித்து விரிவான பரிசீலனை மேற்கொண்ட தொல்பொருள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரும் இக்கருத்தை உறுதிப்படுத்தியுள்ளதாகச் சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த நிறுவனமொன்றிடம் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக இப்பொருள்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் தற்போது அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

(ஐ)

# தீவக முன்பள்ளிச் சிறாரிடையே பற்சுகாதாரம் பெரும் பாதிப்பு

ஊர்காவற்றுறை,ஏப்.24

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள முன்பள்ளி நிலையங்களில் கல்விகற்கும் மாணவர்களின் பற்சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவர்களுக்குத் தேவையான பற்தூரிகைகள் மற்றும் பற்பசைகள் ஆகியனவற்றை வழங்கியுதவுமாறு ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அநேக முன்பள்ளி மாணவர்கள் பல் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பது அறியவந்துள்ளது. அதனைத் தடுத்துநிறுத்தும் பொருட்டு அவர்களுக்கு பற்பசைகள், பற்தூரிகைகளின் பயன்பாட்டை எடுத்துக்கூறி அவற்றைப் பயன்படுத்தச் செய்வதன் மூலம் மேற்படி பல் தொடர்பான நோய்களைக் கட்டுப்படுத்தமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக காரைநகர்ப் பகுதியில் 13 முன்பள்ளி நிலையங்களும், ஊர்காவற்றுறை நகரில் 6முன்பள்ளி நிலையங்களும் ஊர்காவற்றுறை கிராமப் பகுதியில் 7 முன்பள்ளி நிலையங்களும் அனலைதீவில் 4 முன்பள்ளி நிலையங்களும், எழுவைதீவில் ஒருமுன்பள்ளி நிலையமும் இயங்குகின்றன.

இவற்றில் சுமார் 750 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். எனவே, இவர்கள் அனைவருக்கும் பற்பசைகள் மற்றும் பற்தூரிகைகள் வழங்குவதன் மூலம் அவர்கள் மத்தியில் பல் தொடர்பான நோய்களைக் கட்டுப்படுததக் கூடியதாக இருக்குமென தொிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-16)

## போதைப்பொருள் விழிப்புணர்வுப் பிரசாரம்

வலி.தென்மேற்கு,ஏப்.24

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் வலி.தென்மேற்கு, வலி.மேற்கு ஆகிய பகுதிகளில் போதைப்பொருள பாவனை, புகைத்தல் ஆகியவற்றுக்கு எதிரான பிரசாரத்தைத் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். இப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலும் மற்றும் பொது நிறுவனங்களிலும் இவர்கள் இது தொடர்பான கருத்தரங்குகளையும், கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற கர்ப்பிணித்தாய்மாருக்கான கிளினிக்கில் இச்சம்மேளத்தினர் இது தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரத்தை மேற்கொண்டனர். போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள், பாதிப்புகள் பற்றி சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம், செயலாளர் செ.குமாரசிங்கம் ஆகியோர் இக்கிளினிக்கிற்கு வந்திருந்தவர்கள் மத்தியில் விளக்கினர்.

(ஒ-135)

## அரியாலை மேற்கில்

# இரண்டு குழுக்களிடையே மோதல்கள் நீடிப்பு

அரியாலை மேற்குப் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே மோதல்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் இப்பகுதியில் இடம்பெற்ற கலை விழா நிகழ்வு ஒன்றில வைத்து ஒருவர் தாக்கப்பட்டதை அடுத்துத் தொடங்கிய இக்குழுக்களிடையேயான மோதல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இரவு வேளைகளில் வாள்கள், பொல்லுகள் கொண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளல், வீடுகளுக்கு கல்லெறிதல், பொது இடங்களில் உள்ள மின் குமிழ்களை உடைத்தல் என அட்டகாசச் செயல்களும் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுக்களின் மோதல்களினால இப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இக்குழுக்களுக்கிடையே மீண்டும் மோதல்கள் இடம்பெற்றன. இந்த மோதல்களின்போது நான்கு மோட்டார் சைக்கிள்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

அரியாலை மேற்கு ஆரம்ப வீதிச் சந்திப்புப் பகுதியில் வாள்கள், அலவாங்கு எனப்பல ஆயுதங்களுடன் 20 இற்கும் மேற்பட்ட நபர்கள் எதிர்க் குழுவினரின் வருகையினை எதிர்பார்த்து இரவு முழுவதும் காத்து நின்றனர்.

(ஐ-12)

# நகரசபை நலன்புரி சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி,ஏப்.24

சாவகச்சேரி நகரசபை நலன்புரி சங்கத்தின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி சங்கத்தின் ஆரம்ப கால அங்கத்தவர்கள் ஆறுபேர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத்தலைவர் மு.செ.சரவணபவ தலைமையில் சங்கத்தின் 25ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவும், ஆரம்ப கால உறுப்பினர் கௌரவிப்பு வைபவமும் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கே.இராசையா மற்றும் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களான ந.இராசதுரை, வே.செல்வராசா, நா.தங்கவேல், ந.சுந்தரலிங்கம், பூ.நாகராசா, வே.கந்தசாமி ஆகியோர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களினால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சங்க உறுப்பினர் சி.இரகுநாதனின் நெறியாள்கையில் சங்க உறுப்பினர்களின் நாடகமும இடம்பெற்றது.

(ஐ-117)

## வளமுடன் வாழ்க!
## திரு.சச்சின்

இன்று (24.04.2004) சனிக்கிழமை **திரு.சச்சின்**
அவர்கள் தனது 31 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவர் துடுப்பாட்டத்தில் மேலும் பல சாதனைகள் புரியவும் நீடூழி வளமுடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

**- சச்சின் ரசிகர்கள்.**

தொட்டிலடி, சங்கானை. (31188)(34-21-11-19)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100/% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:
Royal Industries, Colombo.
☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்
ஸ்ரீ சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

சத்திரத்துச் சந்திக்கு அருகில் (C/34218)



## வைத்தியர் தேவை

சாவகச்சேரி ப.நோ.கூ சங்கத்தினால் நடத்தப்படவுள்ள மருத்துவ சேவை நிலையத்திற்கு இளைப்பாறிய உதவி வைத்தியர் அல்லது (எம்.பி.பி.எஸ்) பட்டம்பெற்ற அல்லது இளைப்பாறிய தகுதியாக உள்ள ஒருவர் தேவைப்படுகிறார். தகுதி உடையவர்கள தங்கள் சுயவிவரத்துடன் 10.05.2004ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(C/34618)(43-21-11-19)

ந.பாலச்சந்திரன் தலைவர்
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்.



## செய்தியாளர்கள் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள
கீழே குறிப்பிடப்படும் இடங்களில் உதயன் நாளிதழின்
பிரதேசச் செய்தியாளர்களாகப் பணியாற்றுவதற்கு
ஆர்வமும், தகுதியும் அனுபவமும்
உள்ளவர்களிடமிருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழில் நிறைந்த தேர்ச்சியும் செய்தித்துறை மற்றும் பத்திரிகைத்துறைகளில் நாட்டமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

25 முதல் 30 வயதுடையோர் விரும்பப்படுவர்.

விண்ணப்ப இறுதி நாள்: 30.04.2004

- கிளிநொச்சி நகரம்
- பரந்தன்
- வட்டக்கச்சி
- இராமநாதபுரம்
- கண்டாவளை
- பூநகரி
- முழங்காவில்
- வேரவில்
- திருவையாறு
- ஸ்கந்தபுரம்
- முல்லைத்தீவு நகரம்
- முள்ளியவளை
- ஒட்டுசுட்டான்
- முத்தையன்கட்டு
- தண்ணீரூற்று
- புதுக்குடியிருப்பு
- மாத்தளன்
- உடையார்கட்டு
- கற்சிலைமடு
- மல்லாவி

பிரதம ஆசிரியர்
உதயன் பப்ளிகேஷன்ஸ்
361, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.

(ச-34550)(34-13-17)


## பொதுமண்டபங்கள் நிறுவும் பணிகள்

கோண்டாவில்,ஏப்.24

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் (நியாப்) கீழ் 12 இடங்களில் பொதுமண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென உலகவங்கியினால் 65 லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நியாப் திட்டத்தினால் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்ற பகுதிகளிலேயே இந்தப் பொதுமண்டபங்கள் நிறுவப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இடைக்குறிச்சி, வல்லிபுரம், துன்னாலை வடக்கு, புலோலி தெற்கு, துன்னாலை தெற்கு. அத்தாய், நவாலி தெற்கு, சரவணை கிழக்கு, இருபாலை தெற்கு, காரைநகர் மத்தி, புளியங்கூடல், குடத்தனை ஆகிய இடங்களிலேயே பொது மண்டப கட்டடப் பணிகள் இடம்பெற்றுவருன்றன.

(எ-49)

## கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மக்களுடன் மக்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்குச் சங்கத் தலைவா வி.மோகநாதன் தலைமையில் உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை கலந்து கொள்ளவுள்ளார்.

காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கத்தைச் சேர்ந்த சரத் பெர்னாண்டோ, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.சூசை ஆனந்தன், கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்.இன்பம, மகளிா அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரைகளை ஆற்றவுள்ளனர்.

(10)


## தேவை

எமது கல்வி நிலையத்துக்குப் பெண் உதவியாளர் தேவை. 25.04.2004 ஞாயிறன்று பி.ப. 3 மணிக்கு நேரில் வரவும்.

**C.C.A.**
சுன்னாகம்

(3136)



## தேவை

பிரபல எலக்ரோனிக் நிறுவனத்திற்கு விற்பனையாளர் தேவை. இருபாலாரும் நேரில் சமுகம் தரவும்.

01C, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் அருகில்)
(C/34578)



## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றி வரும்
திருமதி சௌ.சிவமலர் அவர்களின் அன்புத் தந்தை
### நா.தம்பிஜயா

17-04-2004இல் இறைவனடி அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்ததோடு இவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தீவக நலன்புரிக்கழகம்
வலயக்கல்வி அலுவலகம்.தீவகம்.

(31182)(43-21-11-19)



## ஓராண்டினில்.... இதயம் சுமக்கும் நினைவுகள்

தோற்றம் 1927 – 05 – 20



மறைவு 2003 – 04 – 24

அமரர் **தொம்மை பிலிப்பு**

அவனி தனில் நீ மறைந்து
ஆண்டு ஒன்று ஆயிடினும்
நினைவு தனில் நின் நினைவு
நீங்கவில்லை ஒரு தினமும்
பரிவுடனே நீ கூறும்
பாசமான வார்த்தைகள்
பாவியார் எம் உள்ளங்களில்
பரிதவிக்க விட்டுவிட்டு
பாதியிலே சென்றதுமேன்?

(31012)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (24.04.2004) சனிக்கிழமை காலை 7.00மணிக்கு கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
கச்சாய் வீதி, கொடிகாமம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 – 04 – 1939



மறைவு 06 – 05 – 2003

அமரர் **பொன்னுத்துரை கணநாதன்**
திதி: 24.04.2004

எம் நல்வாழ்விற்கு வித்திட்ட அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றாலும் வாழும் காலங்கள் வரை
உங்கள் ஞாபகங்களைச் சுமந்து வாழும்!

இணுவில் மேற்கு,
இணுவில்.
(31132)(34-21-11-19)

- மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரன்.



## மரண அறிவித்தல்



### மகாலிங்கம் சதீஸ்குமார் (டோச்சன்)

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கு வரதலிங்கம் இல்லத்தை வளர்விடமாகவும், ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சதீஸ்குமார் (டோச்சன்) 17.04.2004 சனிக்கிழமையன்று ஹொலண்டில் காலமானார்.

அன்னார் செ.மகாலிங்கம் - கனகமணி தம்பதியரின் மகனும் கிறிஸ்ரின் குமுதினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியர், காலஞ்சென்ற கதிரவேலு தம்பதியரின் பேரனும், ஜீவரட்ணம் புவனேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும், சுரேஸ்குமா (ஜேர்மனி), கீதாஞ்சலி (ஜேர்மனி), சசிகுமார் (ஹொலண்ட்), ராஜ்குமார் (ஹொலண்ட்), கனிஷ்குமார் (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பரமலிங்கம் தெய்வானை மற்றும் சிவலிங்கம் கமலேஸ்வரி, கணேசலிங்கம் யசோமாலதி (ஹொலண்ட்), அரசலிங்கம் - ராணி (பாறின்), வரதலிங்கம் - ரஞ்சினி (ஹொலண்ட்), மகாலிங்கம் - செல்லமணி ஆகியோரின் பெறாமகனும் அரியகிருஸ்ணர்- சந்திரலீலா, நமசிவாயம் - இந்திரலீலா, சந்திரகுலசிங்கம் - புஸ்பலீலா, கந்தசாமி, செல்வராசா, திருச்செல்வம் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஹொலண்டில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (24.04.2004) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மு.அரியகிருஸ்ணன்.
34, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை.

"வரதலிங்கம் இல்லம்"
கோண்டாவில் வடக்கு கோண்டாவில்.
(31192)
(40-21-19-21)





## இதோ எதிர்பாருங்கள்!



## இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்

## வெளிப்படுத்தின விசேஷ கூட்டங்கள்

இதுவோர் அரிய சந்தர்ப்பமாக மீண்டும் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையைப் பற்றிய எக்காளம் முழங்கப்போகிறது. இந்த எக்காளச் சத்தத்தைக் கேட்க அனைவரும் திரண்டு வாருங்கள்; வந்து வேதத்தின் அதிசயத்தைக் காணுங்கள்.

தினமும் மாலை 4.30 மணிக்கு

காலம்: ஏப்ரல் 2004
19 முதல் 23 வரை
26 முதல் 29 வரை

இடம்: பெத்தேல்,
104,இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

உங்கள் கவனத்துக்கு!

24ஆம், 25ஆம் திகதிகளில் மட்டும் விஷேச விடுதலைக்கான கூட்டம்; 24ஆம் திகதி காலை 10மணிக்கும் 25ஆம் திகதி மாலை 4.30 மணிக்கும் நடைபெறும்.

உங்கள் வாழ்வில் தீராத வியாதிகள், பில்லி சூனியக் கட்டுக்கள், காரணமில்லாத தோல்விகள், மனவிரக்தி, தலைமுறை சாபங்கள், பாவபழக்கவழக்கங்கள் இவை யாவற்றிலுமிருந்து விடுதலைபெற யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாவும் இலவசம்!

T.P.:021 222 6458.(30965)

(26-11-19-21)

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 29 ★ 12 ★ 1915



உதிர்வு 21 ★ 04 ★ 2004

## அமரர் சி.கே.கந்தசுவாமி

(கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர்)

" தந்தை தயாளன் குருமுதல்வன் நாவில் சீர்க்
கந்தசுவாமி கலைமாணி - முந்தைநாள்
கொக்குவில் இந்து குருதிலகன் கோகில்லாத் தக்க
அதிபனுமே தான்

கண்ணியமாய் வித்தை பல கற்பிக்கும் விற்பன்னன்
நண்ணிக் குறைகடிந்து நல்வழியில் - பண்ணிப்
பலமாணவர்க்குப் பயிற்றினான் பண்பாய்
நலமாவுலகியலு நன்று."

1960 முதல் 1971 வரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து எமது சமூகத்தை நல்வழிப்படுத்திய ஆசான் சி.கே.கந்தசுவாமி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அவரின் இறுதிக்கிரியைகள் சிட்னி நகரில் இன்று நடைபெறும் இச்சமயத்தில் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுககும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
(34637)(36-16-18) பழைய மாணவர் சங்கம் - கொழும்புக்கிளை.

# மரண அறிவித்தல்



## தம்பிஜயா கந்தசாமி

புங்குடுதீவு, 06 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமாகிய தம்பிஜயா கந்தசாமி கொழும்பில் 19.04.2004 திங்கட் கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - தெய்வானையின் அன்பு மகனும் காலஞ்சென்ற குழந்தைவேலு - கனகம்மாவின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சுதர்சினி (சுவிஸ்), காலஞ்சென்ற கஜேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வநாதனின் (சுவிஸ்) மாமனாரும் சாரங்கனின் (சுவிஸ்) பேரனும் செல்லத்துரை (இந்தியா), பாலசுந்தரம் (இந்தியா), காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் பொன்ராஜ் (வவுனியா சோதிடர்), இரத்தினராஜா (கொழும்பு வர்த்தகர்), சரஸ்வதி, இரத்தினகோபால் (நோர்வே), யோகாம்பிகை, கமலாநிதி ஆகியோரின். அன்புச் சகோதரரும் கோமளம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, கிறிஸ்ரபெல், வசந்தா, திருமலர் (நோர்வே), குணலிங்கம் (ஆனைப்பந்தி, பிரபல வர்த்தகர்), கிநேசல் (ஜெர்மனி), சோதிலிங்கம் (யாழ்.வெற்றிலைக்கடை), கனகலிங்கம் (வவுனியா), சறோஜினிதேவி (கொழும்பு), அன்புமலர் (கொழும்பு), அன்ன லெட்சுமி (இந்தியா), கனகரத்தினம் (சுவிஸ்), ஜெயமதி ஆகியோரின் (கொழும்பு) மைத்துனரும் ஜெயலட்சுமி, சந்திரன் (பிரான்ஸ்), சதானந்தன், இதயச்சந்திரன், பாக்கியலெட்சுமி (சுவிஸ்), விஜயரட்ணம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரது பூதவுடல் புஞ்சி பொரளை உடேனி புளோரிஸ்ட் மைய வாடியில் வைக்கப்பட்டு 22.04.2004 வியாழனன்று கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33, சிவன் பண்ணை வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (31270)(38-16-18-36)

தகவல்: சகோதரிகள்.

## உதைபந்தாட்டம்

தமிழீழ விளையாட்டுத்துறை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் அளவெட்டி டயானா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 2.30 மணிக்கு
இளவாலை யாங்ஹென்றிஸ் வி.க. எதிர் கம்பர்மலை யங் கம்பன் வி.க.

பிற்பகல் 3.45 மணிக்கு
பொற்பதி வி.க. எதிர் மணற்காடு சென்.அன்ரனீஸ் வி.க. (ஒ)


கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை

இலவசம்

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:

யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
(30331) யாழ்ப்பாணம்.

நிறைஞ்சனாஸ் சாங்கானை



அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ
நடித்த
வசீகரி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இற்கு
BRUCE WILLIS நடித்த
MERCURY RISING
(C/34612)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந், அன்சி, சிம்ரன், தியாகராஜன்,
நடித்த
ஜெய்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00,9.30 (பு.நே.)
(C 34180)(12)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த



கில்லி
10.30.,2.30,
6.30, 9.30
(பு.நே.)
(ரீலஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/34517)(22)

லக்சுமி இணுவில்
சிம்பு, த்ரிஷா, விவேக், ரகுவரன்
இன்னும் பலர் நடித்த



அலை
காட்சி நேரம்: 11.00, 3.00, 6.30 (பு.நே.)
(C 34180)(12)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
07 - 05 - 1950

உதிர்வு
25 - 03 - 2004

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்
சாவகச்சேரி, சிவன்கோயில் வீதியை
வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி வைகுந்தராஜா தையல்நாயகி

மாதங்களும் வருடங்களும் மாயமாய்ச் சென்றாலும்
மனதிலுள்ள நின்முகம் என்றும் மறைந்தேதான் சென்றிடுமோ?
சுந்தரவதனமதில் சஞ்சலத்தைத் தொலைத்துவிட்டு
சுமங்கலியாய்ச் சென்றீர்களே அம்மா!
சுமக்கின்றோம் சோகங்களை!
பபாளத்தில் பாடுகின்றோம் அது முகாரியாய்ச் கேட்குதம்மா!
பைங்கிளிகள் எமைத் தேடி பறந்தோடி வாருமம்மா!

இன்று (24.04.2004) சனிக்கிழமை சகோதரியின் இல்லத்தில் நடைபெறுகின்ற சபிண்டிகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 29, காட்டுக்கந்தோர் வீதி,
சுண்டுக்குழி.
(31269)(30-36-16-18)

பிரிவால் வருந்தும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்.
சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.

# முதலாம் வருட நினைவலைகள்



அமரர்
## சின்னத்துரை வரதராசா

தோற்றம் 1941-08-15 மறைவு 21.04.2003

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம்
என்றும் உங்கள்
நினைவுகளுடன்...

பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம். (31271)(36-16-18-36)

குடும்பத்தினர்
(றாஜன்).

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதம் சிறீக்காந்தன்

(துரை கொமினிக்கேசன் - அதிபர் - சூராவத்தை முத்துமாரி அம்மன் பொருளாளர்)



சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும கொண்ட வேலாயுதம் சிறீக்காந்தன் அவர்கள் நேற்று (23.04.2004) அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - சரஸ்வதி அவர்களின் மூத்த புத்திரனும் அருமைநாயகம் , இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகசஜந்தினி (உப தபாலதிபர், கோண்டாவில்) அவர்களின் அன்புக் கணவரும் கேசிகா, சோபிகா, சிவடக்சன், லோஜிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜெயகாந்தன், றசந்தினி (பிரான்ஸ்); ரவிக்காந்தன், செல்வகாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன்கோயிலடி,*
*சூராவத்தை சுன்னாகம்.* (31272)(38-36-16-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## செந்தில்நாதன் பிரகலாதன்



செந்தில்நாதன் பிரகலாதன் (Braha) அமெரிக்காவின் நியூஜேர்சியில் 11.04.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சட்டத்தரணி டபிள்யூ.எஸ்.செந்தில்நாதன் - ராஜமாணிக்கம் ஆகியோரின் அருமைப் புதல்வனும் சேரலாதன் (கனடா), தயாபரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிரஞ்சன் நந்தகோபனின் மைத்துனரும் காலஞ்சென்ற திருமதி விஜயரத்தினம், காலஞ்சென்ற காந்திமதி மற்றும் திருமதி புனிதவதி விநாயகமூர்த்தி, ரி.ராஜதுரை ஆகியோரின் மருமகனும காலஞ்சென்ற இரத்தினசபாபதி, காலஞ்சென்ற திருமதி புவனசுந்தரம் மற்றும் டாக்டர் (திருமதி) ஜெயரத்தினம்(மலேசியா), திருமதி துரைசிங்கம் (கனடா) ஆகியோரின் பெறாமகனும் ஸ்ருதி, சுந்தர ரமணன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு - 8 A.F.றேமண்ட்ஸ், மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*181/1, W.A. சில்வா மாவத்தை,*
*கொழும்பு - 06*
*தொலைபேசி: 2587796* (C/34633)(38-16-18)

தகவல்:
W.S.செந்தில்நாதன்
(தந்தை).

## திருமதி சரஸ்வதி சண்முகசுந்தரம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சண்முகசுந்தரம் அவர்கள் 22.04.2004 வியாழக கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - நாகம்மாவின் புதல்வியும் கந்தையா சண்முகசுந்தரம் (முன்னாள் வேலைப்பதிவுத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் காண்டீபன், குமணன் ஆகியோரின் அன்புத் தாயும் கீதாஞ்சலி, குகாநந்தி அவர்களின் மாமியும் காலஞ்சென்ற இலங்கயர் (முன்னாள் இறைவரித்திணைக்களம்), பரமேஸ்வரன் (முன்னாள் சுங்கத்திணைக்களம்), மகேஸ்வரன் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்), சரோஜினிதேவி (அளவெட்டி), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌதம், ஆர்த்தி, நர்மிளா, பிரணவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.04.2004 அன்று கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடவன்பாலை ,*
*அளவெட்டி மத்தி,*
*அளவெட்டி.* (C/34636)(38-16-18-36)

தகவல்:
சரோஜினிதேவி,
(சகோதரி).

## திருமதி விமலாதேவி நடராஜா



தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி நடராசா 20.04.2004 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் தம்பாலை மயில்வாகனம் - செல்லப் பாக்கியம் (அமரர்) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் கணபதிப்பிள்ளை நடராஜாவின் அன்பு மனைவியும் கணபதிப்பிள்ளை - பொன்னம்மா (அமரர்கள்) தம்பதிகளின் அன்பு மருமகளும் தில்லைநாராயணன், திருமதி சந்திரலிங்கம் சத்தியதேவி; பாஸ்கரநாராயணன் ஆகியோரின் சகோதரியும் திருமதி வேலாயுதம் மகேஸ்வரி, சபாரத்தினம், திருமதி இராஜதுரை அன்னலட்சுமி (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மாலினி (சுவிஸ்), வனஜா (சுன்னாகம் பிரதேச சபை), உசானி (யாழ்.பல்கலைக்கழகம, புவியியல்துறை 2 ஆம் வருடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் முத்துத்தம்பி பாலசிங்கம் (சுவிஸ்) என்பவரின் அன்பு மாமியாரும் சர்ஜனாவின் (சுவிஸ்) அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*நீர்வேலி வடக்கு.* (31273)(38-36-16-18)

தகவல்:
க.நடராஜா (கணவர்).

# உலகளாவிய ரீதியில் சிறுவர்கல்விக்கு உதவும்படி கோரி ஒன்று கூடல்

உலகளாவிய ரீதியில் கல்வி நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு உதவும்படி தேசியத் தலைவர்களைக் கோரும் பொருட்டு, இலங்கையின் 8மாகாணங்களைச் சேர்ந்த 300இற்கும் மேற்பட்ட பாடசாலைச் சிறுவர்கள் கடந்த 20ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கூடினார்கள்.

இவர்களுடன், மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 சிறுவர்களும் இணைந்துகொண்டனர்.

'சிறுவர்களுக்கான கல்வி' என்ற உலகின் மிகப்பெரிய பரப்புரையின் ஒரு பகுதியாக நூறு நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான பிள்ளைகளுடன் இலங்கையைச் சேர்ந்த இந்த 300 சிறுவர்களும் தங்கள் குரலை இணைத்துக் கொண்டுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் ஆரம்பக் கல்வி வழங்குவதில் அவசரமான முன்னுரிமை பெறப்படவேண்டும் என்பதற்காகவும், வறுமைக்கு முடிவு கட்டுவதற்காகவுமே இந்த ஒன்று கூடல் நடத்தப்பட்டது. (8)

## ஜே.வி.பியினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கப்போகின்றோம் எனக்கூறி நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கும் ஜே.வி.பியினர் முதல் நாளன்றே பௌத்த பிக்குகள் மீது புத்தகங்களைத் தூக்கியெறிந்து அவர்களைத் தகாத வார்த்தைகளால் நிந்தித்தமை வேதனைக்குரியது.

எந்த மதத்தைச் சார்ந்த மத குருவாக இருந்தாலும் அவர்களை மதிக்க வேண்டியது மனிதப் பண்பாகும்.

ஜாதிக ஹெல உறுமய சார்பாக நாடாளுமன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பௌத்த பிக்குகளை அவமதிக்கும் வ... பேசுவதற்கு அரச ஊடகங்... ஜே.வி.பியினர் பயன்படுத்த அனுமதித்தமைக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் விமல் வீரவன்ஸ போன்றவர்களுக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (க)

## நோர்வேயை விமர்சித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு கோரியிருக்கின்றார். இதிலிருந்து அவருக்கு எங்கள் மீது உள்ள நம்பிக்கை தெளிவாகத் தெரிகிறது. அதற்கு நாங்களும் ஆக்கபூர்வமாகப் பதில் அளித்திருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் இரண்டு தரப்பும் அமைதி வழிமுறைக்கு அனுசரணையாக இருக்க வாருங்கள் என்று எங்களை அழைத்தால் நாங்கள் நிச்சயம் வருவோம். இப்போது விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு வருகிறோம். அவர்கள் சரி என்றால் பேச்சுக்களைத் தொடங்குவது பற்றி முடிவு செய்யலாம். ஆனால், அவை எப்போது மீண்டும் தொடங்கும் என்பது பற்றி இப்போது எங்களால் ஏதும் கூற இயலாது" - என்றார்.

முன்னர் நோர்வேயைக் கடுமையாக விமர்சித்த ஜனாதிபதி, இப்போது மீண்டும் அதே நோர்வே நாட்டைச் சமாதானப் பணிக்கு அழைத்திருப்பதால் ஏதாவது முன் நிபந்தனைகள் வைக்கப்பட்டுள்ளனவா என்று ஜனாதிபதியின் அலுவலக அதிகாரி ஹரீம் பீரிஸிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர் -

"இந்தச் சமயத்தில் முன்பு நாங்கள் வைத்த விமர்சனங்கள் பற்றி எதுவும் பேச விரும்பவில்லை. முன்பு நோர்வே செய்த அனுசரணை பற்றி ஜனாதிபதி எழுப்பியவை குறிப்பிட்ட பிரச்சினைகள், குறிப்பிட்ட விமர்சனங்கள், அவை அனைத்தும் எழுத்து மூலம் அல்லது வாய்வழியாக நோர்வேத் தரப்பிற்குத் தெரிவிக்கப்பட்டன. அவை பற்றி நோர்வே நாட்டுக்கும் நன்கு தெரியும். அவை அனைத்துமே அமைதி வழிமுறை நன்கு செயற்பட வேண்டும் என்பதற்கான ஆக்கபூர்வமான விமர்சனங்கள். அவை செய்யப்பட்டன என்பதால் நோர்வே நாட்டின் அனுசரணை தேவைப்படாது என்று அர்த்தப்பட்டுவிடாது. இந்தப் பிரச்சினை தீர - அமைதிப் பேச்சுக்கள் தொடர அவர்களின் ஈடுபாடு அவசியம். இதற்காக மீண்டும் அழைக்கிறோம். நோர்வே இது பற்றி உற்சாகத்துடன் பதில் கூறியிருக்கிறது. விடுதலைப் புலிகளும் நோர்வே தரப்பை அழைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்" - என்று பதிலளித்தார்.

இந்தியாவும் இதுவிடயத்தில் பங்குபற்றவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். இந்தியாவை அழைக்கும் எண்ணம் உண்டா என்று கேட்டபோது ஹரீம் பீரிஸ் -

"முன்பு இருந்த அரசு இந்த அமைதி வழிமுறையில் அனைத்துத் தரப்பையும் - இலங்கையின் அனைத்து நண்பர்களையும் - முழுதாக ஈடுபடுத்தவில்லை என்பதுதான் எங்களுடைய விமர்சனமாக இருந்தது.

"இலங்கையின் முக்கிய நட்பு நாடுகள் என்கிற முறையில் இந்தியாவின் அதிக ஈடுபாடு வேண்டும் என்பது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஒருமித்த நிலைப்பாடு.

எனவே, ஒரு நட்பு நாட்டை அழைத்தால் இன்னுமொரு நட்பு நாட்டை அழைக்கவில்லை" என்று கூறிவிடமுடியாது என்றார் - ஹரீம் பீரிஸ். (க)

## யானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்கும் இலக்கும் எவை என்பது துலாம்பரமாகிவிட்டன.

... புலிகளுக்கு இடை... கால நிர்வாகத்தை வழங்குவது ... துப் பேசும் ஐ.தே. கட்சியினது ...

தமிழீழத்தை உருவாக்க ... லும் தமிழ்க் கூட்டமைப்பினதும்

முஸ்லிம்களுக்குத் தனி நிர்வாகம் கோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் - தர்ம இராஜ்ஜியத்துக்காகப் பிரசாரம் செய்யும் ஜாதிக ஹெல உறுமயவினதும் - ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கும் விதத்திலான நலன்களை நிறைவு செய்யும் கஷ்டமான பொறுப்பு புதிய சபாநாயகர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

- இப்படி விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (க)

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகத்தில் இருந்த ஆவணங்கள் பலவும் நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதனின் சகோதரர் தகவல் தருகையில்-

புதன்கிழமையன்று இரவு 10 மணியளவில் மேற்படி அலுவலகம் தீப்பற்றி எரிவதாகத் தனக்கு தொலைபேசி மூலம் தகவல் கிடைத்தது என்றும் -

அதனையடுத்து தான் உடனடியாக அங்கு சென்ற போது பொதுமக்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர் என்றும் தெரிவித்தார்.

இத்தீவிபத்துச் சம்பவம் தொடர்பாகச் சம்மாந்துறைப் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பொலீஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-9-7)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புடன் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சபாநாயகர் தெரிவில் ஐ.தே.க. வேட்பாளர் லொக்குபண்டார வெற்றி பெற்றமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு பெரிய அரசியல் சறுக்கல் - பின்னடைவு - என்று கூறப்படுகிறது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் புதிய அரசு மெத்தனம் காட்டி வருவதே தாங்கள் ஐ.தே. வேட்பாளரை ஆதரித்ததற்குக் காரணம் என்று சபாநாயகர் தெரிவு முடிந்த கையோடு செய்தி நிறுவனங்களுக்கு வழங்கிய பேட்டியில் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் எம்பிக்களான செல்வம் அடைக்கலநாதன். சிவாஜிலிங்கம் ஆகியோர் கூறியிருந்தனர்.

அதை அடுத்தே அவசர அவசரமாக நோர்வேத் தரப்போடு தொடர்பு கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தாம் ஆர்வமாக இருப்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தினார் என்று கூறப்படுகின்றது.

# நாடாளுமன்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாது எனக் கைவிரித்திருந்தனர்.

இந்த நிலையில், தற்போது எங்களது அணியைச் சேர்ந்த இருவரைக் கடத்திச் சென்றவர் யார் என்பதனை மக்கள் ... அறிந்துகொண்டுள்ளார்கள். ...து கட்சியில் இருவரைக் கடத்தி தங்களுக்குச் சார்பாக அரசுத் தரப்பு பயன்படுத்தியதாலேயே சபாநாயகர் தெரிவில் அரசுக்கு எதிராக வாக்களிக்க நாங்கள் முடிவுசெய்தோம்.

எமது இரு உறுப்பினர்களை தமது ஆள்களே கடத்திச் சென்றனர் என்ற உண்மையை அரசுத் தரப்பு ஒப்புக்கொண்டு பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும். அப்படிச் செய்தால் நாம் அரசுக்கு ஆதரவளிப்போம்.

எம்மை ஐந்துமுறை ஜனாதிபதி அழைத்து தமக்கு ஆதரவு நல்குமாறு கோரினார். நாம் அவரது கட்சிக்கு ஆதரவு வழங்குவது குறித்து ஆலோசித்து வந்தோம். ஆனால், இறுதிநேரத்தில் எமது உறுப்பினர்களை அரசுத் தரப்பினர் கடத்திச் சென்று தமக்குச் சாதகமாகச் செயற்படுவதற்கு அவர்களை இணங்கச் செய்தனர். இது முற்றிலும் தவறான செயற்பாடாகும்.

புலிகளின் அணியோடு நாம் சேர்ந்துவிட்டோம் என்று கூறி ஜே.வியினர் தகாத வார்த்தைகளால் எம்மை வசைபாடினர். அது தவறு. இத்தகைய போக்கு இந்த நாட்டின் ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல்.

தமது அரசுக்கு ஆதரவு வேண்டி முதலில் தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியவர்களே அரசுத் தரப்பினர்தான் அது வெற்றியளிக்கவில்லை.

அந்த முயற்சி சரிவந்திருந்தால் தமிழ்க் கூட்டமைப்பினரை ஆஹா, ஓஹோ என்று புகழ்பாடியிருப்பார்கள். அப்போதும் எங்கள் மீது வசைதான் பாடுவார்கள்.

புலிகளுக்குச் சார்பான தமிழ்க் கூட்டமைப்புடன் கைகோர்த்து நாட்டைத் துண்டாட எந்தக் கட்சி முயன்றாலும் அதற்கு எதிராக இறுதிவரை போராடுவோம்.

கருணா குழுவைப் பயன்படுத்திப் புலிகளைப் பலவீனப்படுத்த நல்ல வாய்ப்பு இருந்தது. அதைச் செய்ய அரசு தவறிவிட்டது. இந்த அரசு புலிகளுக்கு எதிராக வெளியில் பேசினாலும் இதுவும் புலிகளுக்கு உதவியே வருகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பியான இரா.சம்பந்தனை நாடாளுமன்றத்தில் பேசவிடாமல் அரசுத் தரப்பினர் கூச்சலிட்டுக் குழப்பியது துரதிஷ்டவசமானது. அவரது பேச்சைச் செவிமடுப்பதன் மூலம் அமைதி நடவடிக்கைகள் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள விரும்புனோம். ஆனால், அது சரிவரவில்லை.

நாடாளுமன்றத்தில் கூச்சலிடுவதன் மூலம் புலிகளைத் தாங்கள் தோற்கடித்துவிடலாம் என்று அரசுத் தரப்பினர் கருதுவது போலத் தென்படுகின்றது. இது சிறுபிள்ளைத்தனமானது.

இந்த அரசு அதன் பதவிக்காலம் முழுவதும் தாக்குப் பிடிக்குமா என்பது சந்தேகம்தான். ஏனெனில், உரிய பெரும்பான்மை அதற்கு இல்லை.

ஆனால், எது எப்படியென்றாலும் நாங்கள்தான் அரசைத் தீர்மானிப்பவர்கள் (King Makers).

எங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்பதை நாம் உணர்வோம். அதுவும் வியாழனன்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வை அடுத்து அது மிகவும் அபாயமான நிலைக்குப் போயிருக்கின்றது. எங்களுக்குக் கொலை அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் வருகின்றன. ஆனால், அத்தகைய மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப்போவதில்லை. இந்த நாட்டின் மக்களைப் பாதுகாப்பதற்கான எமது பணிதங்குதடையின்றித் தொடரும். நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியினர் பயங்கரவாதிகள் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டனர். அது நாடாளுமன்றத்தை சாக்கடையாக்கிவிட்டது.

- இவ்வாறு அவர்கள் கூறினார்கள். (க)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் குற்றம் சுமத்தி வந்தவர் இலங்கை ஜனாதிபதி குமாரதுங்க. அது குறித்து நோர்வேப் பிரதமரிடம் கேட்டபோது அவரது தற்போதைய மனமாற்றத்துக்கான காரணம் என்ன என்பது தனக்குத் தெரியாது என்று கூறிய நோர்வேப் பிரதமர் "இலங்கையில் புதிய தேர்தல் நடந்துள்ளது; புதிய அரசு பதவியேற்றுள்ளது" என்று சுட்டிக்காட்டினார்.

சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும் என்பதற்குக் கால அட்டவணை ஏதும் இல்லை என்று குறிப்பிட்ட பிரதமர் பொண்டிவிக் முதலில் புலிகள் தரப்பிலிருந்து எங்களுக்குக் கோரிக்கை கிடைக்கவேண்டும். அப்படி வந்தால் - அப்படிவரும் என்று நாம் நம்புகிறோம் - சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது குறித்து இரு தரப்பினருடனும் நாம் கலந்தாலோசனை செய்வோம்" என்று கூறினார்.

அரசுத் தரப்பில் சபாநாயகர் பதவிக்கு நிறுத்தப்பட்ட வேட்பாளர் அந்தத் தேர்வில் தோற்றது பற்றிய தகவல் நேற்றுமுன்தினம் மாலை வெளியானதும் சற்று நேரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கைக்கான நோர்வேத் தூதுவருடன் உரையாடினார் என்றும் -

அதன் பின்னரே அவர் நோர்வேப் பிரதமருடன் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டார் என்றும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க-7-9)


GROUP CLASSES
(2005) (2006)
CHEMISTRY
By .DIAS B.Sc. (Hons.)
COM.MATHS
By. M. SRI B.Sc.
104/4, CROSS Rd., ATHIYADY
(30925)(38-13-36)

Logic
மாபெரும் கருத்தரங்கு
★ இன்று பிறைற்றின் கல்வி நிலையம் தென்மராட்சி
24.04.2004 9.30 p.m
★ அச்சுவேலி மத்திய கல்லூரி
25.04.2004 9.30 a.m
By: S.சயந்தன், S.R.J. சுதன், P.கமல்
(31265)(40)

A/L 2005
கணக்கீடு
திரு. பாலவாசன B.B.A. (F.m spl.)
பங்குடமை
Sat.,Sun. 7-9 a.m
ஆரம்பம்: 25.04.2004. Sun.
விக்னா கல்வி நிறுவனம்
(C734616)

A/L LOGIC
இறுதிக் கருத்தரங்கு
ஆசிரியர்: எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம் : 26.04.2004
திங்கள் 9 மணி
(தொடர்ச்சியாக 6 நாள்கள் நடைபெறும்)
★ அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளுங்கள்.
(31068)(13-36)

LOGIC
2006 A/L
SAT. SUN.
8 a.m.
எடுப்புக்கள்
By: P. கமல்
BRIGHTMAN
நாவலர் வீதி.
(31 86)(40)

DAY CLASS
O/L மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் விரைவில்!
மது கல்வி நிறுவனம்
டச்சுவீதி. இருபாலை. கோப்பாய்.

BEACON யாழ்நகர்

புதிய பிரிவு ஆரம்பம்
24.04.2004
➢Diploma in Ms Office
➢Diploma in C++
➢Diploma in Auto Cad
43,Thaddatheru Junction, Jaffna
T.P: 021 2225170

Touch COMPUTER SYSTEM
The right way to touch IT
புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA IN AUTOCAD( With Ms VISIO)
CERTIFICATE IN MACROMEDIA DREAMWEAVER
ஆகிய பிரிவுகள் 25.04.2004 ஞாயிறு பி.ப. 4.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.
DURATION: 2 MONTHS
COURSE FEES : 2000/=
(31260)(36) Director.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் - 12.06.1939 மறைவு - 25.03.2004

### அமரர் அரியகுட்டி நடேசு

25.03.2004 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பவிளக்கு அமரர் அரியகுட்டி நடேசு அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (24.04.2004) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலங்காவற் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி. (31275)(30-16-18)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வேலும்மயிலும் சின்னத்தங்கம் பிலோமினா
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி போல் வேலும்மயிலும சின்னத்தங்கம் பிலோமினா 23.04.2004 அன்று காலமானார்.

அன்னார் மனோரஞ்சி, மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வைத்திய கலாநிதி வேலும்மயிலும் (அல்வாய்), பாக்கியநாதன் (பிரதம எழுதுவினைஞர் - யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), திருமதி மனோரஞ்சிதம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2004) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஏழாலை இசுதோ ... த்தில் நல்லடக்க ஆராதனை செய்யப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

துலாவை,
அல்வாய். (34639)(38-16-18)

தகவல்-
Dr.சி.வேலும்மயிலும்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.